ஸ்ரீ :

# ஸ்ரீராமாநுஜன் 36

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

3 ஸம் | செப்டம்பர் ௴ 1951 கர ௵ ஆவணி | 12 இதழ்

## விபவாவதாரத்தைப்பற்றி எம்பெருமானார் திருவுள்ளம்.

---

பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களென்கிற எம்பெருமானது பஞ்ச ப்ரகாரங்களில் விபவாவதாரத்தைப் பற்றிப் பலர் ஆக்ஷேபங்கள் செய்வதுண்டு; மத்ஸ்ய கூர்ம....ராமக்ருஷ்ணாதியவதாரங்களே விபவாவதாரங்களெனப்படுகின்றன. இவ்வவதாரங்களை எம்பெருமான் செய்து பல பல சேஷ்டிதங்களை ப்ரகாசிப்பித்தருளியிருப்பதை நாம் இதிஹாஸபுராணாதிகளாலே அநுபவித்து ஆனந்தியாநிற்கிறோம். வெண்ணெயுண்டான், மண்ணையுண்டான், எருதடர்த்தான்; மருதிறுத்தான் என்றிப்படி பல சேஷ்டிதங்களை நாம் அநுபவித்து உள் குழையாநின்றோம். இதைப் பரிஹஸிக்கின்ற பிறர் கூறுவதென்னவென்றால், "பகவான் அவதாரம் செய்தானென்பதே பெரும் பொய்யாயிருக்க அவதார சேஷ்டிதங்களென்பது அடியோடு அஸம்பாவிதம்" என்கிறார்கள். அவதாரம் செய்தானென்பது எதனால் பொய்! என்று கேட்டால் அதற்குச் சொல்லுகிறார்கள்—பிறப்பு கருமத்தினாலேற்படுகிறது; ஸம்ஸாரிகளான நாம் கருமங்களைப் பண்ணி அவற்றின் பலனைப் பிறக்கிறோம்; கருமங்களுக்கு வசப்படாதவனான பகவான் எதற்குப் பிறக்கவேணும்? நாமும் பிறக்கிறோம், அவனும் பிறக்கிறான் என்றால் நம்மில் அவனுக்கு என்ன ஏற்றம்? பிறவாமலே அவன் எதையும் செய்யவல்லவனாயிருக்க; பிறந்து செய்யக் கூடிய காரியந்தான் என்ன இருக்கிறது! என்று இங்ஙனே பலவும் சொல்லுகிறார்கள். வைதிகர்களும் ஆஸ்திகர்களுமானவர்கள் *அஜாயமாநோ பஹுதா விஜாயதே—அஜாயமானோ பஹுதா விஜாயதே* என்பது முதலான ச்ருதிப்ரமாணங்களையும் அவற்றுக்கு உபப்ருஹ்மணங்களான இதிஹாஸ புராணங்களையும் தஞ்சமாகக் கொள்ளக் கடமைப் பட்டவர்களாதலால் அவதாரங்களைப் பொய்யென்று கனவிலும் நினைக்க ப்ரஸக்தியில்லை. பொய்யென்பவர்கள் கூறும் துராக்ஷேபங்களுக்கு த்ருப்திகரமாக ஸமாதானங்களும் சொல்லவல்லோம்.

புண்யபாபரூப கருமங்களின் பலனாகவே பிறக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; ஸம்ஸாரிகளின் பிறப்புக்குக் கருமம் காரணமாயிருப்பதுபோலே ஸர்வேச்வரனுடைய

http://acharya.org

பிறவிக்குக் கருணை காரணமாகின்றது. உலகத்திலே கரும பலனைத் தரித்ர ஜன்மம் பெற்றவன் தன் வயிறுவளர்க்கைக்காக மூட்டை சுமக்கிறான், மற்றும் பலவும் செய்கிறான். அக்காரியங்களையே ஸமய விசேஷங்களில் தனிகர்களும் உதாரர்களுமான மஹா புருஷர்கள் கேவலம் கருணையினாலே செய்வதை எங்கும் காணுகின்றோம். இதை யாரும் அபலாபம் செய்யமுடியாது. எங்கும் யாவரும் அநுபவத்திற்காணலாமிதனை. ஆகவே கருமந் தூண்டச் செய்யுங் காரியங்கள் கருணை தூண்டச் செய்யப்படுவதும் ஸம்பாவிதமே யொழிய அஸம்பாவிதமன்றென்பது தெளியலாகும். இவ்வடைவில் எம்பெருமானுடைய பிறவிகளும் கருணையடியாகத் தோன்றுகின்றனவென்று சாஸ்த்ரங்கள் சொல்லுவதானது நன்கு நம்பத்தகுந்ததேயாகும்.

அவாப்தஸமஸ்தகாமனான அச்சுதன் பிறந்து படைக்கவேண்டிய பேறு என்ன இருக்கிறது? ஏதாவது இருந்தாலும், "ஸத்யகாம:; ஸத்யஸங்கல்ப:" என்று போற்றப்பட்ட அப்பெருமானுக்கு ஸங்கல்பத்தால் ஸாத்யமாகாதது எதுவுமிருக்கமாட்டாதே. அப்படி ஸங்கல்பத்தால் ஸாத்யமாகாதது ஏதாவதிருந்தாலன்றோ அதற்காகப் பிறக்கவேணும். ஸங்கல்பத்தால் ஸாத்யமாகாதவையும் சிலவுண்டென்று கொண்டால் அப்போது அவன் ஸத்யஸங்கல்பனென்று கொள்வதற்கே இடமில்லையே என்கிற ஆக்ஷேபங்கள் தோன்றுகின்றன. விவேகிகள் ஆராய்ந்துபார்த்தால் இவையுக்தமான ஆக்ஷேபங்களேயென்று கொள்ள நேரும். ராமாவதாரத்திற்கு அவதாரிகை கூறுகின்ற ஸ்ரீராமாயணம் என்ன கூறுகிறதென்னில், தேவர்களெல்லாரும் இராவணனால் தாங்கள் படுமிடர்களை ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிடம் முறையிட்டுக்கொண்டதாகவும், அப்பெருமான் தான் தசரதாத்மஜனாயவதரித்து ராவணஸம்ஹாரம் செய்யத் திருவுள்ளம்பற்றி அத்தேவர்களுக்கு ஏதோ கட்டளையிட்டு அபயமளித்து அனுப்பினதாகவும் கூறுகின்றது. இதைக்காணும்போது நமக்குங்கூடவொன்று தோன்றுகின்றது; அது யாதெனில், * பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை * என்று ஆண்டாளருளிச் செய்கிறபடி அவலீலையாகத் தொலைக்கத் தக்க இராவணனுக்காக நாட்டிற் பிறந்துபடாதனபடவேணுமோ? தேவர்கள் தங்கள் க்லேசங்களை விண்ணப்பஞ்செய்தவுடனே தன்னுடைய ஸத்யஸங்கல்பத்வசக்தியினாலே அந்த க்ஷணத்திலேயே ராவண ஸம்ஹாரத்தை ஸங்கல்பித்து "ஓ தேவர்களே! இராவணன் தொலைந்தான்; சுகமாக வீடுபோய்ச் சேருங்கள்" என்று சொல்லியிருக்கலாமே, ஸர்வசக்தனான ஸர்வேச்வரனுக்கு இது அரிதன்றே. எளிதாகச்செய்து முடிக்கத்தக்க இக்காரியத்திற்காக நாட்டிற் பிறந்தும் படாதன பட்டும் செய்ததெல்லாம் எதற்காக? ஒரு காரியத்தை மிகவெளிதாகச்செய்து தலைக்கட்ட வல்ல சக்தி வாய்ந்த வொருவன் அதனை அருமைப்பட்டுச் செய்ய முயல்வனோ? அருமைப் பட்டுச் செய்ததாக ஒருவர் எழுதிவைத்தால் அதை நம்ப முடியுமோ?—என்றிப்படியெல்லாம் மனத்தில் தோன்றிவிடக்கூடும். இவற்றுக்குப் பரமத்ருப்திகரமான ஸமாதானங்கள் பெற்றேயாக வேணும்.

அயோத்யாகாண்டத்தின் உபக்ரமத்தில் * 𑌸 𑌹𑌿 𑌦𑍇𑌵𑍈𑌰𑍁𑌦𑍀𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌵𑌧𑌾𑌰𑍍𑌥𑌿𑌭𑌿𑌃। 𑌅𑌰𑍍𑌥𑌿𑌤𑍋 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌜𑌜𑍍𑌞𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌃— ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந: * என்று சொல்லப்படுகிறது. செருக்கிக் கிளர்ந்த இராவணனை வதைசெய்யவேண்டிய தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கியே விஷ்ணுபகவான் இராமனாகத் திருவவதரித்தானென்பது இந்தச்லோகத்தின் பொருள். * யா கம்ஸமுக்க்யக்ருப கீட நிபர்ஹண * (அமாநுஷஸ்தவே) என்று ஆழ்வானருளிச் செய்தபடியே ஈயெறும்பு கொசு முதலியவற்றை

http://acharya.org

நசுக்குதல் போன்ற ராவணகம்ஸ சிசுபாலாதி வதத்திற்காக ஸர்வசக்தன் ஓடிவந்து அவதாரங்கள் செய்கிறானென்றால் இது மனஸ்ஸமாதனமற்ற விஷயமாகத்தானிருக்கிறது. இதைப்பற்றி ஸ்வாமியெம்பெருமானார் திருவுள்ளம்பற்றியிருக்கின்ற விஷயம் இங்குத் தெரிவிக்கப்படுகிறது.

பகவத்கீதையில் நான்காவது அத்யாயத்தில் தன்னுடைய அவதாரத்தைப்பற்றி அர்ஜுனனுக்குச் சில மருமங்களையுணர்த்த வெண்ணிய கண்ணபிரான் ஏதோவொன்றைப் பேசி அர்ஜுனனைக் கேள்விகேட்கப்பண்ணி "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே" என்றருளிச்செய்தான். ஸாதுக்களை ரக்ஷித்தல், துஷ்டர்களைச் சிக்ஷித்தல், அறநெறி குலையாது காத்தல் ஆகிய மூன்றும் தன்னுடையவதாரத்திற்கு ப்ரயோஜநமாக இந்த ச்லோகத்தில் பணிக்கப்பட்டுள்ளது. இவை மூன்றும் ஸங்கல்பத்தாலே நிர்வஹிக்க முடியாதவையோ? "𑌸𑌾𑌧𑌵𑌃 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌤𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁; 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑍋 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁; 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑍋 𑌭𑌵𑌤𑍁—ஸாதவ: பரித்ராதா பவந்து, துஷ்க்ருதோ விநஷ்டா பவந்து, தர்மஸ் ஸம்ஸ்தாபிதோ பவது" என்று ஸங்கல்பித்தருளினால் ஆகாததுண்டோ? ஸகலப்ரபஞ்சங்களினுடையவும் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களையெல்லாம் ஸங்கல்பமாத்திரத்தினால் நிர்வஹித்துக்கொண்டு போருவதாகத்தானே வேதாந்த சாஸ்த்ரம் முறையிடுகின்றது. "அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே" என்பதுதானே ஸ்ரீ பாஷ்ய மங்களச்லோகம். * 𑌸𑍍𑌵𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌵𑌕𑍍𑌲𑍃𑌪𑍍𑌤𑌜𑌗𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌾𑌦𑌿𑌕𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑍇—ஸ்வஸங்கல்பமாத்ராவக்ல்ப்த ஜகஜ்ஜந்மஸ்திதித்வம்ஸாதிகே ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே* என்பது ஸ்ரீ வைகுண்ட கத்யஸூக்தி. விஷ்வக்ஸேநனே தன்னுடைய ஸங்கல்பமாத்ரத்தினால் ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதிலயாதிகளை நடத்திக்கொண்டு போகிறானென்றால் ஸர்வேச்வரனைப்பற்றிச் சொல்லவேணுமோ? ஆகவே ஸாதுபரித்ராணாதிகளுக்காக நேரே ஓடிவந்து பிறக்கிறானென்றால் இந்த வீண் ப்ரயாஸம் எதற்காக? என்றெழுகிற ஆக்ஷேபத்தை ஸ்வாமியெம்பெருமானார் அற்புதமாகப் பரிஹரித்தருளுகிறார்.

துஷ்க்ருத் விநாசநமென்பது [துஷ்டஜநஸம்ஹாரம்] ஸங்கல்பஸாத்யமாகலாம்; ஸாது பரித்ராணம் ஒருகாலும் ஸங்கல்பஸாத்யமாகாது என்றருளிச்செய்கிறார் ஸ்வாமி. ஸாது பரித்ராணம் ஏன் ஸங்கல்பஸாத்யமாகாதென்னில்; ஸாதுக்களாவார் யாவர்? அவர்களின் பரித்ராணமென்பது யாது? என்று விமர்சித்தால் இது ஸங்கல்பஸாத்யமாகாதென்னுமிடம் தன்னடையே விளங்கிற்றாகுமென்று கீதாபாஷ்யத்தில் ஸாதுக்களின் ஸ்வரூபத்தை நன்கு விவரித்தருளுகிறார்; ஸ்ரீ பாஷ்யத்தில் [* அந்தஸ் தத்தர்மோபதேசாத் * என்ற ஸூத்ரபாஷ்யத்தில்] ஸாது பரித்ராணம் ஸங்கல்பஸாத்யமாகாதென்று முக்தகண்டமாகாவருளிச்செய்கிறார். எம்பெருமானைக் கண்ணாரக் காணவேணும், அவனோடு வாயாரப் பேசவேணும், அவனது அமுதமொழிகளைச் செவியாரப் பருகவேணும். அவனைத்தழுவி முழுசிப் பரிமாறவேணும்—என்றிப்படியெல்லாம் பாரிப்பவர்களே ஸாதுக்களாவார் என்கிறார். இங்ஙனே குதூஹலமுள்ளவர்களை எம்பெருமான் ஸங்கல்பத்தாலே எங்ஙனம் பரித்ராணம் பண்ண முடியுமென்று விவேகிகள் விமர்சிக்கவேணும். இவற்றுக்காக நேரில் வந்துதானேயாக வேண்டும்.

இது கஜேந்த்ராழ்வானுடைய கதையினால் ஸுஸ்பஷ்டமாகிறதென்று நம்மாழ்வார் திருவுள்ளம்பற்றி "மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய், தொழுங்காதல்களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும்பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே" (திருவாய்மொழி 3—1—9.)

http://acharya.org

என்ற பாசுரமருளிச் செய்தார். முதலை தன்னாலடர்ப்புண்ட கஜேந்திராழ்வானுடைய இடரை ஸங்கல்பத்தாலே போக்கியிருக்கலாம்; அல்லது, *கருது மிடம் பொருது கையிலே வந்து நிற்கவல்ல திருவாழியாழ்வானைப் போக விட்டுப் போக்கியிருக்கலாம்; அரை குலையத் தலை குலைய மடுவின் கரைக்கு ஓடி வரவேண்டிய அவச்யமேயில்லை: மடுவின் கரைக்கு எழுந்தருளியும் "க்ராஹம் சக்ரேணமாதவ:" "குட்டத்துக் கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்" "ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்றாழிதொட்டானை" என்கிறபடியே திருவாழியாழ்வானைச் செலுத்தியேயன்றோ யானையினிடரைத் தீர்த்தருளிற்று. அத்திருவாழியாழ்வானைப் பரமபதத்திலிருந்தே நியமித்தருளினால் ஒரு கணப்பொழுதில் காரியத்தை நிறைவேற்றிமீளமாட்டாமையில்லையே. "பகவதஸ் த்வராயை நம:" என்னும்படியும் "ஸஸம்ப்ரமோத்தாயாயம் உபாந:—ஸ்ரக்பூஷாம்பரமயதாயதம் ததாந:" என்னும்படியும் எதற்காகத் தானே நேர்பட வோடிவந்தானென்கிற சங்கைக்கு நம்மாழ்வார் *தொழுங்காதல்களிறளிப்பான்* என்பதனால் நன்கு ஸமாதானம் தெரிவித்தருளினாராயிற்று. *நாஹம் கஜேஶ்வரஸ்யாஸ்ய த்ராணாயேச்சே யதுநந்தந கரஸ்தகமலாந்யத்ர பாதயோரர்ப்பிதும் தவ—நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்த கமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ* என்று கஜேந்திராழ்வான் விண்ணப்பஞ் செய்தது கொண்டு இவ்வளவு சாஸ்த்ரார்த்தங்கள் ஸூசிதமாயின. நம்மாழ்வார் காட்டியருளின சீரிய பொருளையே நம் ஸ்ரீ பாஷ்யகாரர் நிதியாகக் கொண்டு அருளிச் செய்தாராயிற்று. ஆகவே அவதாரங்களுக்கு முக்யப்ரயோஜநம் ஸாதுபரித்ராணமே யென்றும், அதுதான் ஸங்கல்ப ஸாத்ய மல்லவென்றும், ராவணாதி ஸம்ஹாரரூபமான துஷ்க்ருத்விநாசநமானது ஆநுஷங்கிக ப்ரயோஜனமே யொழிய முக்ய ப்ரயோஜனமன்றென்றும் சொல்லிற்றாயிற்று.

இப்படியானால் *சாதுசனத்தைநலியுங்கஞ்சனைச் சாதிப்பதற்கு—இங்குப் பிறந்த* என்றும், *மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்* என்றும் நம்மாழ்வார் தாமே யருளிச் செய்கிறாரே, இது பொருந்துவதெங்ஙனே? என்னில், இதுபற்றி அடுத்த வியாஸத்தில் விளக்குவோம்.

---

## "மண்ணின் பாரம் நீக்குதற்கே."

எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்பத்தினாலே ஸாதிக்க முடியாத ஸாது பரித்ராணத்திற்காக நேர் கொடு நேரே வந்து பிறந்தருளுகிறானென்றது ஒக்கும்; ராவண கம்ஸ சிசுபாலாதிகளான துஷ்டர்களை நிரஸிப்பது ஸங்கல்பத்தாலே ஸாத்யமாகுமே; அதற்காக வந்து பிறக்கவேண்டிய அவசியமில்லையே. வால்மீகி மஹர்ஷியோ *ஸஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:* என்றும் பணிக்கிறான்; ஆழ்வாரும் *சாதுசனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு—இங்குப் பிறந்த வேத முதல்வன்* என்றும் *மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்* என்று மருளிச் செய்கிறார்; இதுவென்? என்னில்; கேண்மின்.

ஸ்ரீவசநபூஷணத்தில் (192) "ஈச்வரனவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை யென்று ஜீயருளிச் செய்வர்" என்றுள்ளது. இதற்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்தி வருமாறு;—"பாகவதாப

http://acharya.org

சாரம் பண்ணினால் ஈச்வரன் அஸஹமாநனாய் உசித தண்டம் பண்ணு மென்னுமத்தை ஆப்தவசநத்தாலே யருளிச் செய்கிறார் (ஈச்வரன்) என்று தொடங்கி. அதாவது, ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்க வல்ல ஸர்வ சக்தியான ஸர்வேச்வரன், தன்னை யழியமாறி இதர ஸஜாதீயனாயவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸந ரூப அதிமாநுஷசேஷ்டிதங்களெல்லாம்—ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோ பாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே யென்று ஆப்ததமரான நஞ்சீயரருளிச் செய்வரென்கை." என்று.

இதற்குமேல் நாம் விவரிக்கவேண்டிய தொன்றுமில்லை. ஆனாலும் சிறிது விவரிக்கிறோம். ஹிரண்ய ராவணாதிகளின் நிரஸநம் ஸர்வ சக்தியான ஸர்வேச்வரனுக்கு ஸங்கல்ப மாத்ரஸாத்ய மென்பதில் ஸந்தேஹமே கிடையாது. நெஞ்சால் நினைப்பிட்ட மாத்திரத்திலே அது நன்கு ஸாத்யமாகும். அப்படியிருந்தும் அதற்காகவும் நேராக வோடி வந்தானெம்பெருமான். ஏனென்னில்; ஒரு சிறு கதை கேண்மின்: ஒரு சிறந்த மஹா ப்ரபு. அவர் நீதிமன்றத்தில் உயர் பதவியில் வாழ்பவர்; மாதம் பதினாயிரம் ரூபாய் சம்பளம் பெறுபவர். அவருடைய அருமைக்குழந்தை வெளியில்போயிருந்து விக்கிவிக்கியழுதுகொண்டேவீட்டுக்கு வந்ததொருநாள். அதைக்கண்டு மஹா ப்ரபுவுக்கு மனம் தாளவில்லை; குழந்தை அழுங் காரணத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்; பக்கத்து வீட்டுப் பையன் கடினமாக அடித்துவிட்டானென்றறிந்தார். கோவமும் வருத்தமும் தாங்கமுடியவில்லையவர்க்கு. இதை அவர் உபேக்ஷித்துமிருக்கலாம்; தன்னிடமுள்ள பணிவிடைக்காரர்களுள் யாரேனு மொருவனை ஏவியாவது அதற்கு ப்ரதிக்ரியை பண்ணச் சொல்லலாம். இரண்டு மின்றிக்கே ஆங்காரம் தாளமுடியாமல் உடனே தாமே யெழுந்து ஓடிச் சென்று தம் குழந்தையை யடித்த பையனை நாடிப் பிடித்துத் தம் கைகளாலே நாலறை யறைந்து சினந்தீர்ந்து திரும்பினார். இது கட்டுக்கதை யன்று. இங்ஙனே பலவிடங்களில் நாளைக்கும் நிகழ்வதைக் காணாநின்றோம். *பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்டவா:* ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்* என்று சொல்லுகிற பகவான் தன்னுயிர் நிலையிலே நலிந்த ஹிரண்யராவணாதிகளான மஹா பாபிகளை இலேசாக விட்டிடுவனோ? அன்னவர்களை ஸங்கல்பத்தாலே யழித்து த்ருப்தி பெறுவனோ? நேராக வந்து நின்று தன் கையாலே கத்தியும் கேடயமுங்கொண்டு கொடிய தண்டம் பண்ணினாலல்லது த்ருப்தியுண்டாகாதே— என்கிற விதுதான் நஞ்சீயருடைய வார்த்தையின் ஸாரம். ஆகவே எம்பெருமான் துஷ்ட சிக்ஷணார்த்தமாக வந்து அவதரிக்கிறானென்பதிலும் குறையில்லை யென்றதாயிற்று. இதனால் அவனுடைய ஸத்ய ஸங்கல்பஸ்வரூபமான சக்தி விசேஷத்திற்கு யாதொரு ஹானியுமில்லை யென்க. அந்த சக்தியை யுபயோகித்துச் செய்யுங் காரியங்களும் அளவிறந்துள்ளன.

---

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

அன்பர்களே !

இந்த ஸஞ்சிகையோடு வருஷம் முடிந்துவிட்டது. அடுத்த ஸஞ்சிகையில் நான்காவது வருஷம் ஆரம்பமாகும். மூன்றுவருடங்கள் முடிந்து விட்டன. மூன்று வருடங்களுக்கும் சந்தா பாக்கியுள்ளவர்கள் பலருளர். இரண்டு வருஷச்சந்தாபாக்கியுள்ளவர்களும் பலர். இந்த மாதத்தோடு முடிவடைகிற மூன்றாவது வருடத்திற்குச் சந்தாபாக்கியுள்ளவர்கள் பெரும்பாலும் யாவருமே யென்று சொல்லலாம். சந்தா செலுத்தாமலும் ஒரு தகவலும் தெரிவிக்காமலுமிருந்து விட்டால் எப்படி ! வேண்டாதவர்கள் பத்ரிகையைப் பெற்றுக்கொள்ளா

http://acharya.org

மல் திருப்பியனுப்பி விட்டாலும் நாங்கள் அபிப்பிராயம் தெரிந்துகொள்ள அநுகூலமாகும். "மௌநம் ஸர்வார்த்த ஸாதகம்" என்றிருந்து விடுவது இப்படிப்பட்ட விஷயங்களுக்கல்ல. அன்னவர்களுக்கு அடுத்தமாதம் முதல் பத்ரிகையனுப்புவதை நிறுத்திக் கொள்ளுகிறோம். அவரவர்கள் பத்ரிகை பெற்றுக் கொண்டவரையில் சந்தா பாக்கியை உடனே "க்ரந்தமாலா ஆபீஸ். காஞ்சீபுரம்" என்ற விலாஸத்திற்கு அனுப்பவேணும்.

இப்படிக்கு,

மானேஜர்—**ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா.**

---

# ஸ்தாந ப்ரமாணம்.

நம் ஆசாரியர்கள் பெண்ணுக்கும் பேதைக்குமறியலாம்படி எளிதாக அருளிச் செய்யும் திவ்யக்ரந்தங்களிலும் சாஸ்த்ரீய பங்க்திகள் சில அவசாத் புகுந்துவிடுகின்றன. விஷய ஸ்வபாவத்தாலே அவை தவிர்க்க வொண்ணாமே வந்து சேர்கின்றனபோலும். பிள்ளை லோகாசார்யர் மிக எளிய நடையில் அருளிச்செய்த முமுக்ஷுப்படியில் இரண்டிடங்களில் ஸ்தாந ப்ரமாண மென்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. (1) ப்ரணவத்தில் நடுவெழுத்தாகிய உகாரத்திற்கு அர்த்தமருளிச் செய்யுமிடத்து "ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. (2) சரமச்லோகத்தில் ஏகசப்தார்த்த மருளிச் செய்கையில் "இந்த ஏகசப்தம் ஸ்தாந ப்ரமாணத்தாலே அவதாரணார்த்தத்தைக் காட்டுகிறது" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. இரண்டிடத்திலும், ஸ்தான ப்ரமாண மென்றால் இன்னது என்பதைக் காட்டாயலே லக்ஷ்யஸ்தலங்களை மாத்திரம் காட்டி விவரணம் செய்யப்பட்டுள்ளது வியாக்கியானத்தில்.

அதை யநுஸரித்து ஸ்தாந ப்ரமாண ஸ்வரூப நிரூபணம் செய்கிறோமிங்கு. "[illegible]—உத்தேச்ய விதேய ஸமர்ப்பக பதத்வயமத்யே உபஸ்திதத்வம் ஸ்தாநத்வம்" என்பது சாஸ்த்ரீய ஸரணியில் நிஷ்கர்ஷித்துச் சொல்லத்தக்க நிர்வசநமாகும். ஒரு பதம் உத்தேச்யத்தைச் சொல்லுமதாயும், மற்றொரு பதம் விதேயத்தைச் சொல்லுமதாயுமிருக்க, அவ்விரண்டு பதங்களினிடையே நிலைபெற்றிருக்கைதான் ஸ்தான (ப்ரமாண) மென்பது. உபநிஷத்தில் *[illegible]—ததேவ பூதம் தது பவ்யமா இதம்* என்றொருவாக்யமுளது. இங்கு 'ததேவ பூதம்' என்பதில் தச்சப்தம் உத்தேச்ய பரம்; பூதசப்தம் விதேயபரம். எப்படி யென்னில், ப்ரஹ்மமாகிற தச்சப்தார்த்தத்தை யுத்தேசித்து பூதத்வம் விதிக்கப்படுகையாலே. இவ்விரண்டு பதங்களினிடையே உள்ளது ஏவகாரம். இப்படியே "தது பவ்யமா இதம்" என்கிற விடத்திலும் தச்சப்தம் உத்தேச்யபரம்; பவ்யசப்தம் விதேயபரம்; இவ்விரண்டு பதங்களினிடையே உள்ளது உகாரம்; முந்தின வாக்யத்தில் ஏவகாரமிருந்த ஸ்தானத்திலே இப்பிந்தினவாக்யத்தில் உகாரமிருக்கையாலே அந்த ஏவகாரத்தின் அர்த்தமே இவ்வுகாரத்திற்கும் கொள்ளப்படுதல் முறைமையாயிற்று. இது தான் ஸ்தாந ப்ரமாணமென்பது. "ததேவாக்நி:......தத் சந்த்ரமா:" என்ற வாக்யங்களிலும் இங்ஙனமே காண்க. ப்ரணவத்தில் உத்தேச்யபரமான அகாரத்திற்கும் விதேயபரமான மகாரத்திற்குமிடையே உகாரமிருப்பதால் இதுவும் அவதாரணப் பொருளதாயிற்று.

http://acharya.org

இனி, சரம ச்லோகத்தில் ஏக சப்தத்தைப் பற்றியும் இவ்விதமாகவே காணலாம். *மாமேவயே ப்ரபத்யந்தே * த்வமேவ உபாயபூதோ மே பவ* என்னுமிடங்களைக் கொள்வோம். முந்தின வாக்யத்தில் "யே மாமேவ ப்ரபத்யந்தே" என்று அந்வயம். எம்பெருமானைச் சொல்லுமதான மாம் என்னும் பதம் உத்தேச்யபரம்; 'ப்ரபத்யந்தே' என்பது விதேயபரம். இவற்றினிடையே உள்ளது ஏவகாரம். "த்வமேவ உபாயபூத:" என்கிற பிந்தின வாக்யத்திலும் இங்ஙனமே காண்க. (சரம ச்லோகத்தில்) *மாமேகம் சரணம் வ்ரஜ* என்றதிலும் மாமென்பது உத்தேச்ய பரம். 'சரணம் வ்ரஜ' என்பது விதேயபரம். இவ்விரண்டினிடையே உள்ளது ஏகபதம். இது ஏவகாரப் பொருள் பெற்று நின்றது ஸ்தானப்ரமாணத்தாலென்றதாயிற்று.

ஆகவே, உத்தேச்ய விதேய ஸமர்ப்பக பதத்வயமத்யே உபஸ்திதத்வம் ஸ்தாநத்வம் என்பது ஸமந்விதமாயிற்று. இதன் ஸ்வரூபத்தை இங்ஙனம் தெளிந்து கொள்ளாமல் ஸ்தான ப்ரமாண மென்பதை யதேஷ்டமாக வ்யவஹரிக்குமவர்கள் இவ்வுண்மையுணர்ந்து தெளியக் கடவர்கள்.

---

# பிராட்டியின் உபதேசம்.

*அகலகில்லேனிறையுமென்று சொல்லி எம்பெருமானோடே நித்யவாஸம் செய்யுமவளான ஸ்ரீ மஹாலக்ஷ்மி எம்பெருமானை உபதேசத்தாலே திருத்துவதாக ஆசாரியர்கள் அருளிச் செய்கிறார்கள். அவ்விஷயம் பிராட்டிக்கு மெம்பெருமானுக்கும் ஸம்வாத ரூபமாக வைத்துக் காட்டப்படுகிறது.

பிராட்டி :—பெருமானே! இதோ வந்து அடிபணிகின்ற இச்சேதநனை அங்கீகரித்து அநுக்ரஹித்தருளவேணும்.

எம்பெருமான் :—இவனுடைய பூர்வ வ்ருத்தங்கள் எப்படிப்பட்டவை யென்பதை ஆராய்ந்து பாராமல் திடீரென்று அங்கீகரித்துவிட முடியுமா? நான் சாஸ்த்ரங்களைக் காட்டிக்கொடுத்து அவற்றில் விதிகளையும் நிஷேதங்களையும் [அதாவது, இன்னின்னவற்றைச் செய்யவேண்டியது, இன்னின்னவற்றைத் தவிர வேண்டியது என்று] தெரிவித்திருக்கிறேன். அவற்றுக்குக் கட்டுப்பட்டு விஹிதங்களைச் செய்து நிஷித்தங்களைத் தவிர்ந்து செவ்வனே ஒழுகினவர்களாயிருந்தால் என்னுடைய அநுக்ரஹத்திற்கு அவசியம் இலக்காகிறார்கள்; இதற்கு ஒருவருடைய புருஷகாரமும் வேண்டியதில்லை.

பிராட்டி :—பிரானே! தேவரீர் ஸர்வஜ்ஞராகையாலே அறியாத தொன்றில்லையே. இவனுடைய பூர்வ வ்ருத்தங்களைத் தேவரீரே ஆராய்ந்து அறிந்து கொண்டு முடிவைத் தெரிவிக்கவேணும்.

எம்பெருமான் :—(ஆராய்ந்து பார்த்து) *பாவமே செய்து பாவியான இவனையா அங்கீகரிக்கச் சொல்லுகிறாய்? வெகு நன்றாயிருக்கிறது. மனத்திலோர் தூய்மையில்லாமலும் வாயிலோரின்சொலில்லாமலும் சேமமேவேண்டித் தீவினை பெருக்கித் தெரிவைமாருருவமே மருவி ஊமனார் கண்ட கனவிலும்பழுதாய் நாள்களை யொழித்தவனன்றோ

http://acharya.org

இவன்;* சிலம்படியுருவிற்கரு நெடுங்கண்ணார் திறத்தனாய் அறத்தையே மறந்து புலம்படி தண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளா போக்கினவனன்றோ இவன்; *சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழல் மடந்தையர் திறத்துக்காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த தொண்டனன்றோ இவன்;* வம்புலாங்கூந்தல் மனைவியைத் துறந்து பிறர் பொருள் தாரமென்றிவற்றை நம்பினவனன்றோ இவன்; இடுமினோதந் தென்று இரந்தவர்க்கு இல்லையே யென்று நெடுஞ் சொலால் மறுத்த நீசனன்றோ இவன்; *ஓடியுமுழன்று முயிர்களே கொன்ற உணர்விலியன்றோ இவன்;* நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் நீதியல்லாதன செய்தும் சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்பவெள்ளத்தாழ்ந்து அருநரகத்தழுந்தும் பயன் படைத்த இவனையா நீ அங்கீகரிக்கச் சொல்லுகிறாய்? நன்று நன்று.

பிராட்டி :—பிரானே! இவனையே தான் நான் அங்கீகரிக்கச் சொல்லுகிறேன்; இவனுடைய குற்றங் குறைகளைத் தேவரீர் அறிந்திருப்பதற்கு மேலாகவே நான் அறிந்திருக்கின்றேன். அறிந்தே தான் இவனையங்கீகரிக்குமாறு வேண்டுகின்றேன். இவனை யங்கீகரிப்பதனால் உமக்கு என்ன சேதம்? அதைச் சொல்லும்.

எம்பெருமான் :—பிராட்டி! இதென்ன? இப்படி கேட்கிறாயே. நானென்ன பைத்தியக்காரனா? நான் சாஸ்த்ரங்களை யேற்பாடு செய்திருப்பது வம்புவேலையா? கீதையில் "தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ" என்று சொல்லியிருப்பதை நீயறியாயா? *தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந், க்ஷிபாமி அஜஸ்ரம் அசுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு* என்றும், *கல்ப கோடிசதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே* என்றும் சொல்லியிருக்கிறேனே, இதெல்லாம் உன் செவியிற் பட்டதில்லையா! நன்மை செய்தவர்களையும் அங்கீகரித்துத் தீமைகள் செய்தவர்களையும் அங்கீகரிப்பதென்று வைத்துக் கொண்டால் பிறகு சாஸ்த்ரங்களையெல்லாம் கிழித்தெறியவேண்டியதுதான். புண்யவான்களை யொழியப் பாபிகளை நான் அங்கீகரிப்பது அரிதுகாண்.

பிராட்டி:—பிரானே!, இப்படி வெட்டொன்று துண்டிரண்டாகச் சொல்லிவிடலாமா? 'என்னூரைச் சொன்னாய், என்பேரைச்சொன்னாய், என்னடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத்தீர்த்தாய், அவர்களுக்கொதுங்க நிழலைக்கொடுத்தாய்' என்றாற்போலே சிலவற்றை யேறிட்டு மடிமாங்காயிட்டு யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகம் என்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்துக்கொண்டு அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக் கொண்டு போருகிறவராக ப்ரஸித்திபெற்றுள்ள உமக்கு இந்த சேதநனை அங்கீகரிப்பதற்கு ஒரு பற்றாசும் கிடைக்கவில்லையா? சிறிது ஆராய்ந்து பாரீர். சரணாகதனைக் கைவிட்டு விடுவது நலமன்று.

எம்பெருமான்:—நன்மையென்று பேரிடலாவதொரு தீமைதானும் கிடைக்குமோ வென்று ஆந்தனையும் பார்த்தேன். பரஹிம்ஸை செய்துகொண்டு திரியாநிற்கச்செய்தே பகவத்பாகவத விரோதிகளாயிருப்பாரை யாத்ருச்சிகமாகக் கொன்றிருப்பனோவென்று பார்த்தேன்; அவ்வகையிலேயுமொன்று கிடைக்கவில்லை. விஷயப்ரவணனாய் வேசிகளைப் பின்பற்றித் திரிகிறபோது அவர்களைத்தேடுவதற்காகவாகிலும் ஒருகால் கோயிலிலே புக்குப் புறப்பட்டிருப்பனோவென்று பார்த்தேன்; அதுதானுமில்லை. வயல்தின்ற பசுவைத் தொடர்ந்தவாறே அப்பசு ஒரு கோயிலை வளையவருமாகில் அத்தையடிக்கையிலுண்டான ஆக்ரஹத்தாலே தானும் அக்கோயிலை வளையவருகையென்று ஒன்றுண்டே, அதுதானும் இவன்பக்கல்

http://acharya.org

கிடைக்குமோவென்றுபார்த்தேன்; கோவதங்கள் பல செய்திருக்கிறானேயொழிய இந்த ஸம்பவம் கண்டதில்லை; ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் ஸ்தோபம் ஹேளனம் என்கிற கணக்கிலே ஒருகாலாகிலும் திருநாமத்தைச் சொல்லியிருப்பனோவென்று பார்த்தேன், அந்தோ! அதுதானுமில்லையே. சிறிதாகிலும் இடம்பெற்றால் ஏறிட்டுக் கைக்கொள்ளுவேனே. நெற்றியைக் கொத்திப்பார்த்தும் பசைகாணக் கிடைக்கவில்லையே, என்செய்வேன்! இவனைப் பெறுகைக்கு நமக்கு பாக்கியமில்லையேயென்று கண்ணீர்விட்டழவேண்டியதாயிருக்கிறதேயொழிய அங்கீகரித்து ஆனந்திப்பதற்கு ஐயோ! அவகாசலேசமுமில்லையே.

பிராட்டி:—பிரானே! உண்மையில் அவகாசலேசமுமில்லையா? நன்றாக ஆலோசித்துப்பாரீர்; அச்சமும் அநுதாபமும் தோன்றி வந்து அடிபணிந்து நிற்கிறானே, இதுவே பற்றாசாக அங்கீகரிக்கத் தட்டுண்டோ? யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்களிற் காட்டில் இதனை மேம்பட்டதாகக் கொள்ளத் தகுதியுண்டே; மேம்பட்டதாகக்கொள்ளாவிடினும் அத்தோடொக்கவாவது கொள்ளலாகாதா? சரணாகதனைப் பரித்ராணம் பண்ணாதே பரித்யாகம் பண்ணுவது தருமமாவென்று ஆலோசித்துப்பாரீர்.

எம்பெருமான்:—(பிராட்டி வாதத்தில் வெற்றிபெற்றுவிட்டாளென்பதை நெஞ்சார அறிந்தும் தன்னுடைய தோல்விக்கு ஸஹஸா இசையமாட்டாமல் ஏதோ சொல்லத் தொடங்குகிறான்.) பிராட்டீ! நீ சொல்லுவது வாஸ்தவந்தான்; எல்லை கடந்த பாவங்களை அநாதிகாலமாகச் செய்து விட்டு ஸ்வல்ப ப்ராயச்சித்தங்கூடச் செய்துகொள்ளாமல் நாணமில்லாதவனாய் வந்துநிற்கிறவிவனை நான் அங்கீகரித்துவிட்டால் சாஸ்த்ரங்களுக்கெல்லாம் ஜலாஞ்ஜலியேயாகுமன்றோ. இதை நீ நன்கு ஆராய்ந்து சொல்லவேணும்.

பிராட்டி:—பிரானே! வாதத்தில் வந்தால் ப்ராமாணிகபத்ததியிலிருந்து வழுவலாகாது. சற்றுமுன்பு நீர்தாமே சொன்னதற்கு முரணாகப் பேசுகிறீரிப்போது. "நன்மையென்று பேரிடலாவதொரு தீமைதானும் கிடைக்குமோவென்று ஆந்தனையும் பார்த்தேன், ஒன்றுங் கிடைக்கவில்லையே, என் செய்வேன்?" என்று சொன்னீர்; "ஏன் ஒன்றும் கிடைக்கவில்லை; இதோ சரணாகதி கிடைத்திருக்கிறதே, இது மிகப்பெரிதன்றோ" என்று நான் சொன்னேன். இதற்குமேல் உம்முடைய வாதம் எழுவதற்கு நியாயமில்லை. இருக்கட்டும். "சாஸ்த்ரங்களுக்கெல்லாம் ஜலாஞ்ஜலியேயாகுமன்றோ" என்கிறீர்; அந்த சாஸ்த்ரங்களிலேயே உமக்கு தயை வாத்ஸல்யம் முதலிய திருக்குணங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே, அவற்றுக்கு ஜலாஞ்ஜலியாகாதோ? இத்தகைய அதிகாரிகளிடத்தில்தானே அக்குணங்கள் நிறம்பெறவேணும். மணற் சோற்றிலே கல்லாராய்ந்துகொண்டு கிடந்தீராகில் உம்முடைய திருக்குணங்கள் யாரிடத்தில்தான் நிறம்பெறும்? மீனுக்குத் தண்ணீர் வார்க்கிறாப்போலே ஸுக்ருதிகளுக்கே அநுக்ரஹம் செய்வதென்று கொண்டீராகில் உமது தயாவாத்ஸல்யாதிகுணங்களுக்கு என்ன உபயோகம்? சொல்லிக் காணீர்.

எம்பெருமான்:-(வாய்திறக்கமாட்டாமே மருளமருள விழித்துத் திகைக்கிறான்; வாதத்தில் தோல்வியடைந்துவிட்டதை அபலாபம் செய்யமுடியவில்லை. சிறிதுபோது தலைகவிழ்ந்திருந்து பிறகு பேசத்தொடங்குகிறான்) பிராட்டீ! உன்னிடம் தோற்றேன்; சாஸ்த்ரமுறையைப் பரிபாலனம் செய்தால் தயாதிகுணங்கள் நிறம்பெற வழியில்லை. தயாதிகுணங்களைப் புகவிட்டால் சாஸ்த்ரபரிபாலனம் செய்ய முடியாமலிருக்கிறது. உண்மையில் நான் இரண்டையுமே பரிபாலனம் செய்யக் கடமைப் பட்டிருக்கின்றேன். வழி தெரியவில்லையே. பேச்சுப்பார்க்கும்போது நீ வெகு நிபுணையாகக் காண்கிறாய்; இரண்டுக்கும் குலைதல் வாராதபடி நீதான் வழிசொல்லித் தரவேணும்.

http://acharya.org

பிராட்டி:—நீர் ஸாமான்யமான அர்த்தங்களை அர்ஜுனனுக்கு உபதேசிக்க நினை
போது அவனுக்கு சிஷ்ய லக்ஷண ஸம்பத்தியுண்டாகவேணுமென்று எதிர்பார்த்தீர்; "ப்ரு
சாமி த்வா தர்மஸம்மூட சேதா:......சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்
அவன் வாயில் வந்தபிறகே உபதேசிக்கத்தொடங்கினீர். அதிற்காட்டில் விலக்ஷணமா
அர்த்தத்தை நான் உமக்குச் சொல்லவேணுமாகில் நானும் அப்படி எதிர்பார்க்கவேண்
மன்றோ. ஆனாலும் அது என் ஸ்வரூபத்திற்குத் தகாதது. உம்மை ஆசார்யபீடத்தி
யிருத்தி நானே சிஷ்யலக்ஷண ஸம்பந்நையாயிருந்து சொல்லுகிறேன் கேளீர். இவ்வர்த்
தத்தை நழுவவிடாமல் சிக்கனக்கொண்டு அநுஷ்டாநபர்யவஸாயியாக்குவதே உமக்கு
உற்றது. அநந்ய சேதஸ்கராயிருந்து கேளும்.

எம்பெருமான்:—ஒரு விச்வாமித்ரன் ஸாந்தீபநிபோல்வாரிடத்திலே சிஷ்யவ்ருத்தி
செய்தவெனக்கு உம்மிடத்தில் சிஷ்ய வ்ருத்திசெய்கை கைக்குமோ புளிக்குமோ? சிஷ்ய
னாகவேயிருந்து கேட்கிறேன், உபதேசம் செய்தருளீர்.

பிராட்டி:—(கர்ணமூலே.) பாபங்களை அபரிமிதமாகச் செய்தும் உம்முடைய தி
வடிவாரத்தே வந்து பணியாதவர்கள் பக்கலிலே சாஸ்த்ரங்களை ஸபலமாக்கிக் கொள்ளீர்;
பாபங்களை எல்லைகடந்து செய்தும் பயாநுதாப லஜ்ஜைகளோடு கூடியோ அவையில்லா
மலோ திருமுன்பே வந்து நிற்பவர்கள் பக்கலிலே தயாவாத்ஸல்யாதி குணங்களை வி
பெறுத்தப்பாரீர். இங்ஙனேயொரு வ்யவஸ்தை கொள்ளில் ஒன்றுக்கும் ஜலாஞ்ஜலி யில்லை
யாமிறே.

எம்பெருமான்:—* ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ.*

---

# அடியேனுடைய யாத்திரை.

(2—முன்தொடர்ச்சி)

6—7—51 தேதியில் பாம்பே நகரத்திலிருந்து பஞ்சவடீ க்ஷேத்திரம் சென்று சேர்ந்
தவரை முன்பு தெரிவித்திருக்கிறேன். பாம்பே நகரைவிட்டுப் புறப்படும் நாளில் அங்கு
நேர்ந்தவொரு மஹாஸந்தோஷ ஸமாசாரத்தை முன்னம் தெரிவித்துவிட்டு மேற்செய்திகளை
பிறகு எழுதுகிறேன். பாம்பேநகரத்தில் ஸ்ரீ வேங்கடேச்வர அச்சுக்கூடத்தலைவரா
(வைகுண்டவாஸி) கேமராஜ ஸ்ரீக்ருஷ்ணதாஸ் ஸேட்ஜீ அவர்களைப்பற்றிக் கேள்விப்படா
ஸ்ரீ வைஷ்ணவர்கள் தென்னாட்டில் சிலரே இருக்கக்கூடும். இந்த ஸேட்டும் இவருடை
ஸஹோதரரான கங்காவிஷ்ணுஸேட்டும் பரமவைஷ்ணவாக்ரேஸரர்களாயிருந்து அபரிமி
மான க்ரந்தங்களையச்சிட்டு வெளியிட்ட மஹான்கள். விசேஷித்து நம்முடைய ஸ்ரீ வை
ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பலவற்றையும் அச்சிட்டவர்கள். இவ்வழியினாலே மஹா
தனிகர்களானவர்கள். இவர்களுள் மூத்தவரான கேமராஜஸேட்டின் மூத்தகுமாரனை
ரங்கநாதஸேட்டும், கனிஷ்டகுமார புத்திரனை முரளீதரபஜாஜ் என்பவனும் இப்போ
மிகப்ரஸித்தியுடன் வாழ்ந்து வருகின்றனர். கேமராஜஸேட்டின் காலத்திலிருந்தே இவர்
ளுடைய பரிசயம் எனக்கு விசேஷமாகவுண்டு. என்னுடைய ஸம்ஸ்க்ருத நூல்கள் சி
வற்றை ஏற்கெனவே இவர்கள் அச்சிட்டுப் பிரசுரம் செய்திருக்கிறார்கள். இப்போதை

http://acharya.org

யாத்திரையில் இவ்வச்சுக்கூடம் மூலமாக மிகப்பெரிய லோகோபகாரமொன்று நடைபெற நிர்ணயமாயிற்று. அதாவது, திவ்யப்ரபந்தங்களுக்கு நம்முடைய திவ்யார்த்ததீபிகையுரை தமிழுலகுக்குப் பயன்படுவதேயன்றித் தமிழறியாத பிறநாட்டினர்க்குப் பயன்படவழி யில்லை. தெலுங்கு தேசத்தவர்களும் ஹிந்திதேசத்தவர்களும் திவ்யப்ரபந்தார்த்தங்களை யநுபவிக்க ஆவலுடையார் பலருளர். அவர்களும் இழவாமைக்காக நாம் ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு. ஹிந்தி ஆகிய மூன்று பாஷைகளிலுங்கூட திவ்யப்பிரபந்த திவ்யார்த்தங்களை யெழுதத்தொடங்கி நம்முடைய ஸம்ஸ்க்ருத ஆந்த்ர மாஸபத்ரிகைகளில் சிறிது சிறிதாக வெளியிட்டுவருகின்றோம் மூன்று நான்கு வருஷகாலமாக—என்பதை உலகமறியும். இவ் விதமான வெளியீட்டில் இதுகாறும் 250 பாசுரங்களின் அர்த்தங்களே பிரசுரமாகியிருக் கின்றன. இவ்வளவு தாமதமாக நடந்துவந்தால் இப்பெரியதொண்டு நமது வாழ்நாளில் எங்ஙனே முடிவுபெறும்? என்கிற சிந்தனை நமக்கு மிகவுமிருந்தது. மேற்சொன்ன கேம ராஜ ஸேட்டின் பௌத்திரனான முரளீதரபஜாஜ் என்பவன் இதையறிந்து தன்னுடைய விசால மான நோக்கத்தின் பலனாக ஸம்ஸ்க்ருதத்திலும் ஹிந்தியிலும் எழுதப்படுகிற நம்முடைய டீகையைத் தன் அச்சுக்கூடத்தில் தன்னுடைய கைங்கர்யமாக வெகு விரைவில் அச்சிட்டு முடிப்பதாக மிக்க ப்ரேமத்துடன் ஏற்றுக்கொண்டு அச்சுப்பணியை அன்றே தொடங்கி விட்டான். வேகமாகவே வேலை நடந்து வருகின்றது. தற்காலம் ஸம்ஸ்க்ருதடீகை அச் சாகிவருகிறது. ஹிந்திடீகையும் க்ரமேண அச்சாகும். ஸ்ரீ வைஷ்ணவவுலகுக்கு இது வொரு மஹத்தானவுதவி. இதனால் அன்று முதலாக அடியேனுக்கு அல்லும்பகலும் ஷ்டீ ஸம்ஸ்க்ருத டீகையை விசேஷித்து எழுதிவருவதும் தத்ப்ரயுக்தமாக விலக்ஷண ப்ரஹ்மானந் தத்தை யநுபவித்துவருவதும் ஆச்சரியமான போதுபோக்காக அமைந்தது. [மேலே, த்வா ரகையைப்பற்றி யெழுதுமிடத்தில் இதன் தொடர்ச்சியாகச் சில விஷயங்கள் காண்க.]

## பஞ்சவடீ க்ஷேத்திரம்.

பம்பாய் நகரிலிருந்து நாஸிக் பஞ்சவடி சென்று சேர்ந்தோம். கோதாவரிக்கரையில் அதிரமணீயமான தர்மசாலைகள் பலபலவுண்டெனினும் ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகளின் மடம் மிகவும் பவித்திரமான இடமாகக் கண்டதனால் அங்கு ஸௌகர்யமாக வஸதியமைத் துக்கொண்டோம். கோதாவரியில் நீர்த்தம் மிகக்குறைவாக இருந்ததனால் முதலில் மனம் வருத்தமுற்றது. இரண்டாநாளிரவில் ஆச்சரியமான நல்ல வெள்ளம் பெருகத்தொடங் கிற்று. இதுதான் எம்பெருமானருள்வெள்ளமென்று கொண்டு களித்துக் குடைந்தாடி மகிழ்ந்தோம். அங்குத் தபோவனங்கள் முதலானவற்றையும் கண்ணாரக்கண்டுகளித்தோம்.

## நர்மதாநதி, இந்தோர், உஜ்ஜயிநி, ஜாவரா.

பஞ்சவடியிலிருந்து உஜ்ஜயிநீ க்ஷேத்ரம் செல்லக்கருதினோம். (மோடர்கார் யாத் திரையாதலால்) வழியிடையில் நிர்மலமாகப் பெருகுகின்ற நர்மதாநதியில் குடைந்தாடி இந்தோர்மாநகரம் சென்று சேர்ந்தோம். இது மிகப்பெரிதான ராஜநகரம். கண்ணைக் கவ ரும் காட்சிகளையுடையது. சிறந்த வியாபாரஸ்தலம். இவ்வூரில் யசவந்தகஞ்ஜ் என்னு மிடத்தில் ப்ரதிவாதிபயங்கர வம்சஸ்தர்களுக்கு அதீனமான ஒரு மந்திரமுண்டு. அது ராமாநுஜகோட் என்று வழங்கப்பெறும். இம்மந்திரத்தில் தென்னாட்டு ஸ்ரீ வைஷ்ணவயாத் ரிகளுக்கு மிகவும் ஸௌகரியமான வஸதியுண்டு. இந்த விடத்திற்கு நிர்வாஹகர்களான ஸேட் முரளீதரஜம்வர், (அவருடைய புத்திரர்களான) கிஸன் கோபாலஸேட், ராதாகிருஷ்ண ஸேட் முதலான பக்தர்கள் நம்முடைய ஸம்பிரதாயத்தில் விசேஷமான ஊற்றமுள்ளவர்கள்.

http://acharya.org

இவர்களது வேண்டுகோளுக்கிணங்கி இவர்களின் பங்களாவில் ஒரு நாள் உபந்யாஸ கோஷ்டி நடத்தப்பட்டது. இவ்வூரில் ஜைனக்கோவிலொன்று கண்படைத்தவர்கள் அவசியம் காணத்தக்கதுண்டு. முழுதும் கண்ணாடிமயமானது. அமைப்பு மிகவும் அதிசயிக்கத்தக்கது.

இந்நகரிலிருந்து உஜ்ஜயிநி சென்று சேர்ந்தோம். ஸப்தபுண்யபுரிகளில் பரிகணிதமான அவந்திகாபுரி யென்பது இதுவே. ஸ்ரீ க்ருஷ்ணபலராமர்கள் ஸாந்தீபநிமஹர்ஷிபக்கலில் 64 நாட்களில் சதுஷ்ஷஷ்டிகலைகளையும் ஓதினவிடம் இதுவே. அந்த மஹர்ஷியின் ஆச்ரமமும் மற்றும்பல விசேஷங்களும் இங்குக்காணத்தக்கவை. இவ்விடத்தில் திருநாராயணபுரம் அக்காரக்கனி ஸ்வாமியின் திருவடிபணிந்து மஹத்பதவிபெற்ற கருடத்வஜாசாரியென்பவர் சிப்ராநதிக்கரையில் ராமகாட் என்னுமிடத்தில் மிகப்பெரிய ராமாநுஜகூடம் அமைத்து ஸ்ரீ வைஷ்ணவர்களை அன்போடு ஆதரித்து வருகிறார். இதற்கெதிரில் பம்பாய் கேமராஜஸேட்ஜீயவர்களின் மிக விசாலமான தர்மசாலையுமுண்டு. சிப்ராநதியின் தெளிவும் அழகும் தனிப்பட்ட சிறப்பு இவ்விடத்திற்கு.

இங்கிருந்து த்வாரகை விடைகொள்ள நினைத்தோம். (13—7—51) ஆனிதன்னிற் சோதி நன்னாளில் பெரியாழ்வார் சாத்துமுறையும் வடக்குத்திருவீதிப் பிள்ளை சாத்துமுறையும் ப்ராப்தமானபடியால் அவற்றை ஆனந்தமாக அநுபவிக்குமிடமாக ஜாவராநகரையுத்தேசித்து அவ்விடம் சென்று சேர்ந்தோம். இங்கு அஸ்மதாசார்யரான ஸ்ரீமத் ப்ரதிவாதி பயங்கரம் காதி அனந்தாசார்ய ஸ்வாமியால் ப்ரதிஷ்டிதரான ஸ்ரீ வேணுகோபாலன் அழகே வடிவெடுத்த திருமூர்த்தியாய்க் காட்சிதரும் வீறு மிகச்சிறந்தது. இப்பெருமான் திருமுன்பே ஷை சாத்துமுறையை முடித்துக்கொண்டு த்வாரகை நோக்கினோம்.

## டாகோர்த்வாரகை—அஹமதாபாத்.

மாலவதேசத்தினிடையேயுள்ள ஜாவராவிலிருந்து குஜராத் தேசத்தைச் சேர்ந்த டாகோர்த்வாரகை வந்து சேர்ந்தோம். த்வாரகை பஞ்சத்வாரகையாகவும் அவ்வைந்தனுள் இதுவுமொன்றென்றும் சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் த்வாரகாதீசன் ஸந்நிதி மிகப் பெரிதாயும் விசேஷ ஸம்பத்தையுடையதாயும் ஆச்சரியமான ஆராதன நிவேதன வைபவங்களையுடையதாயும் காண்கிறது. இவ்விடத்திலும் மேற்சொல்லப்புகும் த்வாரகைகளிலும் வல்லப ஸம்ப்ரதாயஸ்தர்களின் ஆதிக்யமும் அதிகாரமுமே யுள்ளதாதலால் க்ருஷ்ணபக்தி தாண்டவமாடுகின்றது. நம் நாட்டினர் இவ்விடங்களில் தீர்த்த ப்ரஸாதாதிகள் பெறுவதற்கு அவகாசமில்லை யெனினும் மூர்த்தி தர்சனம் மிக மநோஹரமே. இங்கு ஸந்நிதியில் கண்ணபிரான் விஷயமான பல பாசுரங்களையும் முகுந்தமாலை அதிமாநுஷஸ்தவங்களையும் கோஷ்டியாகவிருந்து ஸேவித்து மகிழ்ந்தோம். ஸந்நிதிக்கெதிரில் ஏரிபோன்ற மிகப் பெரிய தடாகம். அதை கோமதீநதியென்று சொல்லுகிறார்கள். ஸ்நாநபாநாதிகளுக்கு மிகவும் அருமையான தீர்த்தம். ஸந்நிதி ஸமீபத்தில் இரண்டு ராமாநுஜகூடங்களுள்ளன. ஸௌகர்யமான வஸதி.

இங்கிருந்து அஹமதாபாத் நகரம் சென்று சேர்ந்தோம். அவ்விடத்தில் ஸஹபு தரவாஜா என்னுமிடத்தில் சபர்மதீநதிக்கரையில் இரண்டு ராமாநுஜகூடங்களுள்ளன. இவ்விடத்தில், மஹந்த் ராமப்ரபந்நாசாரியென்பவர் ஸ்ரீ வைஷ்ணவர்களை ஆதரிப்பதிலும் ஆரா திப்பதிலும் அளவுகடந்த ஊக்கமுள்ளவர். உள்ளும் புறமுமொத்த அன்புவாய்ந்தவர். இவ

http://acharya.org

வூரில் கீதாமந்திரம் என்கிற மிகப்பெரிய அற்புதமான கட்டிடம் சாஸ்திரங்களிற்காணும் திருமாமணிமண்டபத்தை நினைப்பூட்டுகின்றது. இதன் அதிசயம் அவரவர்கள் கண்ணாரக் கண்டே அநுபவிக்கத்தக்கது. பல லக்ஷரூபாய்ச் செலவில் இம்மந்திரத்தை அமைத்த மஹானும் (ஸந்ந்யாஸி) இங்கே காட்சி தருகிறார். இவர் இமயமலையில் தவம்புரிந்து கீதாசார்யனை ஸாக்ஷாத்கரித்து இவ்வரிய பெரிய காரியம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இதை நன்கு நம்புவதற்கு அத்தாட்சிகளுள்ளன.

[இவ்வூர்வரையில் நாம் மோடர்கார்களில் யாத்திரை செய்தோம். இதனால் காலதாமதம் அதிகம் ஏற்பட்டபடியாலும் மேலே த்வாரகாதிகளுக்கு இவற்றில் செல்ல மார்க்கஸௌகரியம் குறைவாயிருந்தபடியாலும் கார்களை இங்கிருந்து திருப்பியனுப்பிவிட்டு இனி ரைல் யாத்திரையே செய்யத்தொடங்கினோம். ரைல்வே மினிஸ்டரான K. ஸந்தானமவர்களைக் கொண்டு டில்லிநகரப்ரமுகர்கள் ரைல்வே வஸதியை வெகு ஸௌகரியமாக அமைத்துத்தந்தபடியால் காரைவிட மேலான ஸௌகர்யத்துடனே மேல்யாத்திரை நிகழ்ந்தது.]

## கலோல்—தாராபூர்—அஹமதாபாத்,

திருநாராயணபுரத்தில் விக்ர்யாதராயெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை அக்காரக்கனி ராமாநுஜாசார்ய ஸ்வாமி [அடியேனுடைய ஜ்யேஷ்ட ஜாமாதாவின் திருத்தகப்பனார்] வடநாட்டில் பலப்ராந்தங்களில் எழுந்தருளி தர்சநப்ரவர்த்தனம் செய்தருளின மஹான். விசேஷித்து குஜராத் ப்ராந்தங்களில் அவருடைய அப்ரதிமமான கீர்த்தி நிலவுமிடங்கள் பலவுள்ளன. அஹமதாபாதுக்குப் பதினைந்து மைல் தூரத்தில் கலோல் என்னுமிடத்திலும் அதைச்சார்ந்த தாராபூர் என்னுமிடத்திலும் அந்த மஹானுடைய திருவருளுக்கிலக்காகித் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவமணிகள் பலரிருப்பதால் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஒருநாள் அங்குச்சென்றிருந்தோம். இந்த ப்ராந்தங்களில் அக்காரக்கனி ஸ்வாமி பல ஆயிரக்கணக்கானவர்களை ஸ்ரீ வைஷ்ணவர்களாகத் திருத்திப் பணிகொண்டாரென்று குலாவப்படுகிறார். சில நூறு ஸ்ரீவைஷ்ணவர்களின் ஆஸ்திக்யத்தை நாம் கண்டு உள்ளம் பூரித்தோம். ஸ்ரீவைஷ்ணவதர்மம் என்பதுபற்றி உபந்யாஸங்கேட்டு அவர்களும் மகிழ்ந்தார்கள். இவர்களின் அளவுகடந்த அன்பும் ஆதரவுங்கண்டு இன்னுஞ் சிலநாள் அங்கிருந்து அவர்களை மகிழ்விக்க மனமிருந்தும் அவகாசக்குறைவினால் அன்றே அஹமதாபாத் திரும்ப நேர்ந்தது.

## கோமதீத்வாரகை—பேடீத்வாரகை.

அஹமதாபாதிலிருந்து த்வாரகை சென்று சேர 24 மணிகாலம் வேண்டும். இடையில் ஜாம்நகர் என்னுமிடத்தில் ஒரு வேளை தங்கிப் பெருமாள் திருவாராதனம் முடித்துக் கொண்டு த்வாரகை சென்று சேர்ந்தோம். த்வாரகா என்று ரைல்ஸ்டேஷனுள்ளவிடமே ப்ரதானத்வாரகை. இதற்கே கோமதீத்வாரகை யென்றும் வ்யவஹாரம். ஸந்நிதியின் பக்கத்திலுள்ள கடலில் கோமதீநதி வந்து கூடுகிறபடியால் இத்தலம் கோமதீத்வாரகை யெனப்படுகிறது. ஸந்நிதியின் ஸந்நிவேசங்கள் மிகவும் புராதனமாயும் விசாலமாயும் மிக வழகிய திருப்பணிகளுள்ளனவாயும் நெஞ்சைக் கவர்கின்றன. ஸ்டேஷனுக்கும் ஸந்நிதிக்குமிடையிலுள்ள தோதாத்ரிமடமென்னும் மிகப்பெரிய தோட்டத்தில் வாஸம் வைத்துக் கொண்டு பெரும்பாலும் ஸந்நிதியிலேயே வஸித்து த்வாரகாதீசனுக்கு அருளிச் செயலோதுங் கைங்கரியத்தை ஆனந்தமாகச் செய்தோம். ஸந்நிதியதிகாரிகள் மிகவும் ஆதரம்



http://acharya.org

காட்டிப்பெருமாள் திருமுன்பே கோஷ்டியாக விருந்து திவ்யப்ரபந்தங்களையும் ஸ்தோத்ரங்களையும் அற்புதமாக ஸேவிக்க அவகாசமளித்ததுடன் கோஷ்டிக்குப் பெருமாளுடைய மரியாதைகளும் பெறுவித்து உடனிருந்து அநுபவித்தார்கள். முக்கியமாக எந்த உத்தேசத்துடன் இந்த யாத்திரை தொடங்கப்பட்டதென்பது அன்பர்களுக்கு ஞாபகமிருக்குமே. த்வாரகை முதலான வடநாட்டுத் திருப்பதிகளில் திவ்யப்ரபந்தங்களைப் பெருங்குழுவாயிருந்து ஸேவிக்கவேணுமென்கிற உத்தேசம் முதன் முதலாக இத்தலத்தில் பரமத்ருப்திகரமாக நிறைவேறிற்று. [அடுத்தபடியாக ஸ்ரீபதரிகாச்ரமத்தில்.]

இங்கு த்வாரகையில் எம்பெருமான் திருமுன்பே ஒரு மஹாத்மாவின் நியமனமொன்று கிடைத்தது. அதை எம்பெருமானுடைய நியமனமாகவே கொண்டு மிக மகிழ்ந்தேன். அதாவது—வடநாட்டுத் திருப்பதிகளென்று ப்ரஸித்திபெற்ற கோகுலம், கோவர்த்தனம், வடமதுரை, விருந்தாவனம், அயோத்தி, சாளக்கிராமம், நைமிசாரணியம், வதரி முதலான திருப்பதிகளைப்பற்றி அவதரித்துள்ள ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகள் தமிழ்ப் பாஷையிலிருப்பதால் வடநாட்டு வைஷ்ணவர்களுக்கு அவை பயன்படாமலிருக்கின்ற குறை தீர அவற்றை ஸம்ஸ்க்ருதத்திலும் ஹிந்தியிலும் மொழிபெயர்த்துத் தனிப்புத்தகமாக அச்சிட்டு உதவவேணுமென்று. கீழே [பம்பாய்நகர ஸம்பவத்தை] நாம் தெரிவித்திருந்தபடி அந்தப்பெரிய வெளியீட்டினுலேயே இதுவும் சரிதார்த்தமாகுமானாலும், என்றைக்கோ முடிவுபெறப்போகிற அதனால் த்ருப்தி பெறுவிக்க முடியாதென்று தோன்றி இப்பணியை உடனே ஸ்ரீத்வாரகாநாதன் திருமுன்பே நிறைவேற்றத் தொடங்கினேன். நாலாயிரத்தினுள்ளும் மொத்தம் இருபத்தொரு பதிகங்கள் [அதாவது 210 பாசுரங்கள்] வடநாட்டுத் திருப்பதி மங்களாசாஸந பரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றுக்கு ஸம்ஸ்க்ருத மொழி பெயர்ப்பை முன்னம் செய்து முடித்துப் பிறகு ஹிந்திமொழி பெயர்ப்பு செய்வோமென்று துணிந்து த்வாரகையிலேயே இஃதெழுத ஆரம்பித்தேன். நெஞ்சு நிரம்பிய உத்ஸாஹத்துடன் இரவு பகலாக இதை யெழுதிக் கொண்டேவந்து எட்டாவது நாளில் ப்ருந்தாவனம் சேர்ந்து அவ்விடத்தில் ரங்கமன்னார் திருமுன்பே இதனை முடித்தேன். இந்த யாத்திரையில் இந்த மஹாநந்தம் அடியேனுக்கு ஒப்புயர்வற்றது. அமுதினுமாற்ற வினிய தமிழ்ப்பாசுரங்கள் தமிழிலிருப்பது அழகே தவிர அவற்றை வேறு எந்த பாஷையில் மொழி பெயர்த்தாலும் அந்தச் சொல்லின்பமும் அந்தப் பொருளின்பமும் அநுபவிக்க நேராதென்பது அடியேனுடைய துணிபு. ஒரு பாசுரங்காட்டுகிறேன்; "தோளிணைமேலும் நன்மார்பின் மேலும் சுடர் முடிமேலும், தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்" என்பது நம்மாழ்வார் பாசுரங்களிலொன்று. இதை யநுசந்திக்கும்போது நம் உடலுமுயிரும் தண்ணந்துழாய் மயமாகவே ஆகிவிடுகிறது. இப்பாசுரத்தின் பொருளை வேறு பாஷைகளில் மொழிபெயர்த்து ஒருவாறு காட்டிவிடலாமானாலும் இந்த ரஸாநுபவம் அதில் அமையாதுதான். தமிழ் மொழிக்கு, அதிலும் ஆழ்வார்களின் ஈரச் சொற்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அஸாதாரணமான இன்சுவை—"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ! திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?" என்னலாம்படியான சுவை இதர பாஷைகளுக்கு அரிதே. ஆயினும் தமிழறிவுக்கு மிகவும் தூரஸ்தர்களாகப் பிறந்தவர்கள் அடியோடு இழந்தே போகலாகாதே, திருவிருத்தத்தில் நம்மாழ்வார் "கனியின்மையில் கருங்காய் கடிப்பவர்போல்" என்று ஒருத்ருஷ்டாந்தம் காட்டியுள்ளாரே; அந்த ரீதியிலாவது ஆகட்டுமென்றெண்ணி *செவிக்கினிய செஞ்சொற்களை பாஷாந்தரங்களிலாக்குவதென்கிற பணியை அடியேன் நெடுநாளாகவே கைக்கொண்டவனே.

http://acharya.org

பிள்ளைப்பெருமாளையங்கார் திருவரங்கக் கலம்பகத்தில் அழகிய மணவாளனுடைய திவ்ய புஜங்களைப்பற்றி வருணிக்கப் புகுந்து பதினறடி வேங்கைப்புலி யென்னும்படியான ப்ரம்மாண்டமான பாசுரமொன்று பேசுகிறார் *நருக்கதிர்வழங்கு தகடுபடு செம்பொன்........ என்று தொடங்கி........அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே* என்று. இதில் ஒரு பகுதி—*அருமறை துணிந்த பொருள் முடிவை யின்சொலமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பியருளிய சடகோபர் சொற்பெற்றுயர்ந்தன* என்பது. கீர்த்தி மூர்த்தியான அஸ் மதாசார்ய ஸ்ரீமத் பரமஹம்ஸ அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமி இதனை அடியேனுக்குப் பாடஞ்சொல்லும் போது "அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பியருளிய சடகோபர்" என்கிற வாக்கியம் வந்தவாறே விக்கிவிக்கியழுவர்; *குரல் மேலுமெழா மயிர்கூச்சுமறு என்ன நிற்பர். அப்படிப்பட்ட தமிழை அடியேன் வடமொழியில் அமுதொழுகுகின்ற நடையிலேயே மாற்றிவிட்டதாக இறுமாப்புடையேன். ஔத்தர திவ்யதேச திவ்யப்ர பந்தாவளீ என்று இந்நூலுக்குப் பெயரிட்டேன். இது ப்ருந்தாவனத்தில் எழுதி முடிந்தபடி யாலே அவ்விடத்திலேயே இதனை அச்சிட்டு வெளியிடக் குதூஹலங்கொண்டேன். உடனே அங்கு ப்ரேமதாம என்னுமச்சுக் கூடத்தில் அச்சிடக் கொடுத்து இரண்டரைமாத காலம் அச்சாகி, முடிந்த புத்தகம் வெளிவந்து விட்டது. ப்ருந்தாவனம் தொடங்கி மேல் யாத்திரைமார்க்கம் முழுவதிலும் இப்பதிப்பின் ப்ரூப் திருத்தங்கள் வந்து கொண்டிருந்தபடி யால் ஆங்காங்குள்ள ஸம்ஸ்க்ருதஜ்ஞ ரஸிகர்களுக்கு வாசித்துக் காட்டுவதும் அவர்களோடு சிரிப்பு மழுகையுமாவதும் ஒருபோதுபோக்காயிருந்தது நமக்கு. கேட்டவர்கள் பலரும் 'பொருளில் நெஞ்சு செல்வதற்கு முன்னே சொல்தொடைதானே ஆகர்ஷகமாயிருக்கின்ற தென்று சொல்லி உள் குழைவர்கள். அப்போது அடியேனும் *ஸ்வம் தேஷ்ட்ந்ருதராம்பவஹ ஸ்விய ஹவ்யேண ஸுணோ ந நாத நேதே—த்வம் தேஷு அந்யதமாம்பஜவித பவத்வேணுக்வணேந் மாதநே* என்று பட்டரருளிச் செய்த கணக்கிலே உள்குழைந்து நிற்பேன். ரஸிக ஸஹ்ருதய ஸஹ்ருந்மணிகள் இதைத் தற்புகழ்ச்சியிலிட்டுக் குற்றங்குறை கூறுர்கள். உள்ளடங் காத ஆனந்தம் பேசுவிக்கிற பேச்சிவை. *குரவையாய்ச்சியரில் பாசுரந்தோறும் ஈற்றடி கள்கண்டு மனஸ்ஸமாதானம் பெறுக. இப்புத்தகத்தை விரும்பும் ஸம்ஸ்க்ருத பண்டிதர் கட்கு விலையின்றி யனுப்பக் குதூஹலமுடையேன். இது ஹிந்தியிலும் மொழிபெயர்க்கப் பட்டுவருகின்றது. தெலுங்கில் மொழி பெயர்த்தாகி அச்சிடப்பட்டும் வருகின்றது. அது விரைவில் வெளிவரும். இந்த யாத்திரையில் எம்பெருமான் இந்த விலக்ஷணமான கைங்கர் யத்தை அடியேன் முகமாகக்கொண்டதற்குக் கைம்மாறு ஒன்றுமறிகிலேன். நிற்க.

## த்வாரகை—பேடத்வாரகை.

கோமதீத்வாரகையிலிருந்து சிறிது ரைல் மார்க்கமாகவும் சிறிது ஸ்டீமர் மார்க்கமாக வும் சென்று ஸேவிக்கத்தக்கது பேடத்வாரகை யென்னுமிடம். அவ்விடத்திலும் ஸந்நிதி ஸந்நிவேசம் மிகச் சிறப்பாகவேயுள்ளது. கண்ணபிரான் விபவாவதாரத்தில் இவ்விடத்திலும் சில காலம் எழுந்தருளியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கிருந்து மறுபடியும் கோமதீ த்வாரகையே சென்று சேர்ந்தோம்.

இந்த ப்ராந்தத்தில், போர்பந்தர் என வழங்கப் பெறும் ஸுதாமாபுரி [குசேலபட்ட ணம்], விராவல் என்கிற ப்ரபாஸதீர்த்தம் முதலானவை ஸேவிக்கத்தக்கவையுண்டு. அவற்றுக்கு நாம் முன்னமே பலதடவை சென்றிருப்பதால் இந்த விசை அங்குச் செல்ல வில்லை. நம்மோடு வந்தவர்களில் பலர் சென்று ஸேவித்து வந்து கூடினர்.

http://acharya.org

## ஸித்தபூர்—நாதத்வாரா—புஷ்கரம்.

த்வாரகையிலிருந்து புஷ்கரம் ஸேவிக்கப் புறப்பட்டு ஸித்தபூர் வந்து சேர்ந்தோம். இது மாத்ருகயா என்னப்படுகிறது. இங்கு நம்போல்வார்க்கு ஸரஸ்வதீஸ்நானமே விசேஷம். ஸ்டேஷனருகில் ஸ்ரீரங்கம் தாதாசார்ய ஸ்வாமியின் மந்திரம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸுகவாஸயோக்யமான விடம். ஸரஸ்வதீநதி ப்ரவஹிப்பதும் இதற்குச் சிறிது தூரத்திலேயே. இங்கிருந்து நாதத்வாரா சென்றோம். [மார்வார் ஜங்ஷனிலிருந்து வண்டி மாறிப் போகவேண்டும்.] இந்த க்ஷேத்திரத்தின் அருமை பெருமைகளைப் பற்றி அடியேன் முன் யாத்திரை வெளியீடுகளில் மிக விரிவாக எழுதியிருக்கிறேன். வல்லப ஸம்ப்ரதாயஸ்தர்கள் மிகவும் ஆதிக்யமாகக் கொண்டாடுமிடம் இது. ஸ்ரீநாதனென்கிற கண்ணபிரானுடைய ஸன்னிதானமே யிங்கு. 'இந்த தேவஸ்தானத்தில் ஒரு நாளைக்கு இரண்டாயிரம் ரூபாய்ச் செலவு' என்பதற்கு மேற்படத் தெரிவிக்கவேண்டிய விசேஷமுளதோ! இங்கு ஸம்ஸ்க்ருத வித்யாலயம், புஸ்தகாலயம் முதலானவை வித்வான்கள் அவசியம் பார்க்கத் தக்கவை. வெகு ப்ரயாஸப்பட்டு அபூர்வமான இதிஹாஸபுராணாதிகளைச் சேமித்துவைத்துள்ளார்களிங்கு. ஸம்ஸ்க்ருத பண்டிதர்களும் இங்கு மலிந்துள்ளார்கள். அவர்கள் ஒரு ஸபை கூட்டி ஸ்ரீக்ருஷ்ண குணாநுபவ ப்ரவசனம் கேட்டு மகிழ்ந்தார்கள். அநேக தர்மசாலைகளிருந்தாலும் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள மிகப் பெரிதான போரபந்தர் ஸேட்தருமசாலை பரம ஸௌகரியமளிப்பது. வாவிகளும் தடாகங்களும் நதியும் புடைசூழ்ந்து மிக மநோஹரமான தலமிது. இங்கிருந்து அஜ்மீர் ஸ்டேஷன் சேர்ந்து புஷ்கர க்ஷேத்ரமடைந்தோம். தன்னைக் காணத் தவம் புரிந்த பிரமனுக்கு எம்பெருமான் தீர்த்தரூபியாக ஸேவை ஸாதித்த விடமிது. ஆகவே இங்குள்ள புஷ்கரமென்கிற மிகப் பெரிய தடாகம் பகவதாத்மக மென்க. இதில் ஆயிரக்கணக்காக இருந்த முதலைகளெல்லாம் வலைவிட்டு வெளியேற்றப்பட்டு இப்போது நிர்ப்பயமாக இருக்கின்ற தென்னும் விசேஷம் இங்குக் குறிப்பிடத் தக்கது. இங்கிருந்து வடமதுரை நோக்கிப் புறப்பட்டோம். [சிலர் ஜயபூர் சென்று பார்த்து மதுரையில் வந்து கூடினர்.]


## மதுரா கோகுலம் கோவர்த்தனம் ப்ருந்தாவனம்.

"மன்னின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்—வடமதுரைப் பிறந்த கண்ணனல்லாலில்லைகண்டீர் சரண்" என்று நம்மாழ்வாரால் போற்றப்பட்டு "ஹேலயஷிதிநிமிலநோ யஸ்ய நாந்தீவாராஹ: வசுதேவ க்ருஹம் வாடீ வ்ரஜவாணீ। கதித்ராவீ ஹநதோ ஹா: சுரதிநாம ஜநாநாவேதே ஹவத்ரண மாய ஜக்ஷு: ஸுஸேவநா:—கோவர்த்தநோ கிரிவரோ யமுநா நதீ ஸா ப்ருந்தாவநம் ச மதுரா ச புரீ புராணீ, அத்யாபி ஹந்த ஸுலபா: க்ருதிநாம் ஜநாநாம் ஏதே பவச்சரணசாரஜுஷ: ப்ரதேசா:" (அதிமாநுஷஸ்தவே) என்று கூரத்தாழ்வான் குலாவினவிடங்களில் சென்று சேர நினைக்கும்போதே ஒரு விலக்ஷணமான ஆனந்தமுண்டாயது. அடியேன் தினப்படியாக வாய்வெருவுகிற இத்தலங்களில் நாலுநாள் ஸஞ்சரித்து ஆத்மானந்தமடைந்த விதம் ஆத்மைகவேத்யம். மதுராபுரியில் யமுனைக்கரையில் ப்ரயாககாட்டென்னுமிடத்தில் வேணீமாதவமந்திரத்தில் ஆனந்தமாகத் தங்கியிருந்தோம். [கூடவந்தசிலர் இங்கிருந்து ஆக்ராநகர் சென்று அவ்விடத்து விசேஷங்களைக் கண்டுகளித்து விருந்தாவனம் வந்து சேர்ந்தார்கள்.]

ஒரு சிறுவிசேஷமிங்குக் குறிப்பிடவேண்டியதாகிறது. க்ருஷ்ணா ஜில்லா நூஜிவீடு நகரத்தில் ப்ஸித்த ஜமீன்தாரியாக விளங்கும் ஸ்ரீமான் நடாதூர் சடகோபாசாரியரென்பவர்

http://acharya.org

ஹரித்வாரம்
கங்கைக்
கரையில்
5-9-51-ல்
எடுத்த



பதரிகாச்ரம
யாத்ரா
கோஷ்டிப்
படம்.

1. P. B. ஸ்ரீநிவாஸன். 2. நெல்லூர் சக்ரவர்த்தி. வெங்கடாசார். 3. மங்கலம். ராமாநுஜய்யங்கார்.
4. டில்லி. கோதண்டராமய்யங்கார். 5. மணவாள. திருவேங்கடாசார். 6. T. G. ஸ்ரீநிவாஸாசார்ய சிரோமணி.
7. திருநெல்வேலி வீரராகவாசாரியர். 8. ஆஸுரி. வேங்கடாசாரியர். 9. நெல்லூர். வெங்கடநரஸிம்ஹாசாரியர்.
10. மல்லியம் எம்பார் சடகோபாசாரியர். 11. திருமெய்யம் ஜீயர்ஸ்வாமி. 12. P. B. A.
13. கற்பூரம் பட்டப்பா வேங்கடாசாரியர். 14. திருநீர்மலை. கோமடம் ராமாநுஜாசாரியர்.
15. டில்லியில் ஒரு உத்யோகஸ்தர். 16. மாம்பள்ளம். தி. வி. பாஷ்யகாராசார். 17. P. B. ரங்கநாதன்.
18. நூஜிவீடு. சிரஞ்சீவிராமன். 19. நூஜிவீடு நாடாதூர் சடகோபாசாரியர். 20. வானமாமலை தோதாத்ரி ஐயங்கார்.

இந்த யாத்திரையில் நம்மோடுகூடவே புறப்படுவதாக இருந்தவர் சில அஸௌகரியங்களி னால் தடைபட்டு நின்றார். நாம் அஹமதாபாதிலிருந்து மோடார்கார்களைத் திருப்பியனுப்பி விட்டு ரயில் பயணமேசெய்துவருகிறோமென்பதைத் தெரிந்துகொண்டவிவர் உடனே தமது காருடன் புறப்பட்டு விருந்தாவனத்தில்வந்து நம்மோடு கலந்துகொண்டார். இங்கிருந்து பதரிகாச்ரமம் பாதிவழிவரையில் கார்யாத்திரையே செய்ய வாய்த்தது. பதரிகாச்ரமம் திருமந்த்ரம் திருவவதரித்தவிடமாதலால் திருமந்த்ரார்த்த காலக்ஷேபம் செய்துகொண்டு சென்று பதரீநாதன் திருமுன்பே சாத்துமுறைசெய்யவேணுமென்னுங் குதூஹலங் கொண்டே இவர் புறப்பட்டுவந்துசேர்ந்தார். அப்படியே நடைபெற்றது.

கோகுலம் கோவர்த்தனம் ப்ருந்தாவன பரிஸரங்கள் இவற்றை யெல்லாம் பெரி யாழ்வார் திருமொழி நாச்சியார் திருமொழிகளின் அநுஸந்தானத்துடன் ஸேவிக்கப் பெற்றோம். இப்பிறவியில் இவ்வானந்தத்தை அடியேன் இதுவரை பதினெட்டுபர்யாயம் பெற்றிருந்தாலும் பத்தெட்டு அத்யாபக ஸுஹ்ருந்மணி ஸ்வாமிகளுடனும் மற்றும் முப்பது பக்தவர்க்கங்களுடனும் இம்முறை ஸேவிக்கப் பெற்ற ஆனந்தம் தனிப்பட்டது. ப்ருந்தா வனத்தில் கீர்த்தி மூர்த்தியான (ஆத்ய) கோவர்த்தநம் ரங்காசாரியர் ஸ்வாமியின் திருமாளிகையில் அங்குள்ள பக்த மணிகள் ஒரு நாள் ஸபை கூட்டிக் கண்ணபிரானுடைய திருக்கல்யாண குணங்களை உபந்யஸிப்பித்துக் களித்தார்கள். (கீழே தெரிவித்த விவரப்படி) த்வாரகையிலிருந்து இரவும் பகலும் எழுதி வரப்பெற்ற ஔத்தர திவ்ய தேச திவ்ய ப்ரபந்தாவளி இவ்விடத்தில் எழுதி முடிக்கப்பட்டு ஸ்ரீரங்கமன்னார் ஸன்னிதி வாசலிலுள்ள ப்ரேமதாம என்னும் அச்சகத்தில் அச்சடிக்க இவ்விடத்து மஹாந்துக்கள் கூடி ஏற்பாடு செய்து முடித்தவைத்த மஹானந்தத்தை மீண்டு மிங்கு ப்ரஸ்தாவிக்கிறேன்.

## டில்லிமாநகர்ப் புறப்பாடு.

2—8—51 மாலை முதலாகப் புதுடில்லி மாநகரில் விசேஷங்கொண்டாட அவ்விடத்து அன்பர்கள் நாளிட்டு நிச்சயித்திருந்தபடியால் அவ்விடம் சென்று சேரவேண்டிய ஸமயம் ஸமீபித்து விட்டது. அப்படியே அந்த ஸமயத்திற்குச் சரியாகப் புதுடில்லி சென்று சேர்ந்தோம்.

## புது டில்லி.

இவ்விடத்து மஹான்களின் மஹாக்ருபைக்கு இலக்காகி 9—8—51 வரை இங்குத் தங்கியிருக்க ப்ராப்தமாயிற்று. இவ்விடத்தில் நடந்த விசேஷங்களைப்பற்றி இவ்விடத்து மஹநீயர்கள் தனிப்பட எழுதியுள்ளவை அச்சாகி வெளிவருகிறபடியால் அவற்றைப்பற்றி இங்கு அடியேன் விசேஷமாக எழுதத்தக்கது யாதொன்றுமில்லை. ஆயினும் அடியேனு டைய க்ருதஜ்ஞதாநுஸந்தானம் உலகமறிய விளங்கவேண்டுமென்பதுபற்றி இங்குச் சில வார்த்தைகளெழுத ஆவல் கிளர்கின்றது. இப்போது சென்னை மாநகரில் போஸ்டுமேஸ்டர் ஜெனரல் பதவியில் (P. M. G.) அமர்ந்து விளங்குகின்ற ஸ்ரீமான் C. V. ராஜன் அவர்கள் 1933-ம் வருஷத்திலிருந்து பத்து வருஷங்கள் வேலூரிலும் சென்னையிலும் அடியேனுடைய உபந்யாஸ கோஷ்டிகளில் அந்வயம் பெற்றுப் பரம ப்ரீதி வஹிக்கலானார். அவரும், உலக மறிந்த மஹநீயரான ஸ்ரீமத். S. வரதாசாரியர் ஸ்வாமியும் உத்யோக நிமித்தமாக டில்லி மாநகரில் வாழ்ந்தபோது (எழெட்டு வருஷங்களுக்கு முன்) அடியேன் யாத்திரையடைவில் அங்குச் செல்ல நேர்ந்தது. உலகிலுள்ள ஸகல மஹான்களினுடையவும் ப்ரீதி ஒரு தட்டி

http://acharya.org

யும், S. வரதாசார்ய ஸ்வாமியின் ப்ரீதிமாத்திரம் ஒரு தட்டாயும் வாழப் பெற்றவனடியேன் என்பதை எடுத்துரைக்காமலிக்கமுடியுமோ? இவ்விரண்டு மஹான்களுடையவும் அன்புக்கும் அதன் பரீவாஹமான கட்டளைக்கு முட்பட்டு நாலைந்து தடவைகளில் டில்லி சென்று அங்கு ஸ்வல்ப நாள் தங்கியிருந்து மஹநீயர்களின் முன்னிலையில் சில உபந்யாஸங்கள் நிகழ்த்த நேர்ந்ததுண்டு. அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் ஒரு முறையில் ஸ்ரீமத். உ. வே. S. R. S. ராகவாசார்ய ஸ்வாமி களினுடையவும், மறுமுறையில் டாக்டர். ஸர். கே. எஸ். கிருஷ்ணன் அவர்களுடையவும் நிர்ஹேதுக பரம க்ருபைக்குப் பாத்திரமானேன். இங்கு (நிர்ஹேதுக) என்று அடியேன் எழுதுவது வெறும் உபசார வார்த்தை யன்று; உள்ளுறையும் பெருமானறிய உண்மையானது. அவர்களுடைய அந்த பரம க்ருபை நாளடைவில் வேரூன்றி சதசாகமாகப் பணைத்ததொரு கல்ப வ்ருக்ஷம் போன்றதாயிற்று.

S. R. S. ராகவன் ஸ்வாமி சென்ற ஆண்டில் அடியேனைக் கடாக்ஷிக்கவே காஞ்சீபுரத்திற் கெழுந்தருளி அங்கிருந்து அடியேனோடு கூடவே சென்னைத் தொண்டமண்டலம் காலக்ஷேப கோஷ்டிக்கும் (சனி ஞாயிறுகளில்) எழுந்தருளியிருந்தார். பரமாணுவைப் பர்வதமாக்குவதென்கிற ப்ரபாவம் பெரியார்களுக்கு அஸாதாரணமாதலால், அவ்வுபந்யாஸ கோஷ்டியில் அடியேனுடைய இளையபுன்சொற்பொழிவைப் பற்றிப் பெருக்கப் பேசினது அல்லாமல் ஷஷ்டி யப்த பூர்த்திக் கொண்டாட்டத்தைப் பற்றியும் சிறு விதை விதைத்தார். "காலோப்தமிவ ஸத்பீஜம்" என்கிற கணக்கிலே அது திடமாகவேரூன்றி விசேஷமாகத் தளிர்க்கவும் பூக்கவும் காய்க்கவும் பழுக்கவும் தொடங்கிவிட்டது. *பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறுகபயன் பெறுமாறு* என்னுமாழ்வார் பாசுரமல்லது வேறொன்றும் நினைவுக்கு வந்திலது. ஷஷ்டி ராகவையங்கார் ஸ்வாமியின் திருவுள்ளத்தின் வைசால்யத்தையும் தூய்மையையும்பற்றி என் சொல்லவல்லேனென்வாய்கொண்டே. சிறந்த உத்யோக பதவியில் வாழுமிப் பெரியார் நீசனேன் நிறை யொன்றுமிலேனிடத்தில் காட்டியருளின அன்பு அளவுகடந்ததே. "துரும்பைத் தூணாக்கவல்லவர் மஹான்கள்" என்றதற்கு இப்பெரியாரே முதன்மையான சான்றுவர்.

டாக்டர். ஸர். K. S. கிருஷ்ணன் என்பவர் நமது நாட்டுக்குள் ஒரு சிறந்த மஹாமேதாவியாகக் குலாவப்பட்டு வருகிறார். பிறநாட்டினராலும் பெரும்பதவியில் வைத்துப் பாராட்டப்படுகின்றவர். இவர் வியக்கத்தக்க சால்பு அடியேன்பால் சிறிதளவுமில்லை யென்பதை உள்ளமறியும். இவருடைய வாத்ஸல்ய குணம் விளங்குதற்கு அடியேன் ஒரு வியாஜமாயினேன். மற்றும், ஸ்ரீமத். V. S. ஸுந்தரமையங்கார், C. S பார்த்தஸாரதி ஐயங்கார், A. S. ஐயங்கார் போல்வாரான பல மஹான்களும் எழு நாட்களிலும் காட்டின அன்பைக் காணுமிடத்து, ஸார்வபௌமனுக்குப் பணிவிடைக்காரியிடத்தும் வியாமோஹ முண்டாவதாக எழுதுகிறார்களே அதுதான் நினைவுக்கு வருகின்றது.

"காஞ்சியிலும் சென்னையிலும் நடந்த விசேஷங்களிற் காட்டிலும் பதின் மடங்கு அதிகமாக டில்லியில் நடந்ததாகப் பத்ரிகைகளில் வாசித்துமகிழ்கிறோம்" என்று நூற்றுக் கணக்கான ஆப்தர்கள் திருமுகங்களருளினார்கள். பல நூற்றுக்காதங்களுக்கப்பால் முன் பின் முகமறியாத மஹா மஹா மஹான்களும் தங்களுடைய ஸுஹ்ருத்துக்களுக்கு நடக்கும் விசேஷங்களிற்போல் கலந்து பரிமாறிக் களித்ததை நினைக்குங்கால், பதின் மடங்கன்று— ஆயிர மடங்கு அதிகமாகவே நடந்ததென்று கூறலாம். உலகப் பிரசித்தரான ஸ்ரீமத். அனந்தசயனமையங்காரையும், K. ஸந்தானம் அவர்களையுமே அடியேன் இங்கு நம் நாட்டு மஹான்களாகக் கண்டேன், திவாகர், முன்ஷி, காட்கில், திருமல்ராவ்....என்னப்படுகிற

http://acharya.org

# கர௵ ஆவணி௴ ஸ்ரீபதரிகாச்ரம யாத்திரை.



மற்ற மஹான்களனைவரும் என்னை ஒருவனாக மதிக்க வேண்டாதவர்கள். அப்படிப்பட்ட வர்களும் நிர்ப்பந்தத்திற்காக வல்லாமல் அந்தரங்க ப்ரீதி பொலிய முன்னடியாகவ வந்திருந்து பெருமைப் படுத்தியது உண்மையில் S. R. S. ராகவன் அவர்களின் பெருமைக் கடலின் ஒரு சிறு திவலையேயாம்.

ஸ்ரீமத் அனந்தசயனமையங்காரவர்களோடு நெருங்கிப்பழகும் பாக்கியம் அடி யேனுக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. மிகப் பெருமை வாய்ந்த மஹான்களில் பரிகணி ரான இப்பெரியார் தாம் அக்ராஸனம் வஹித்த நாள் தவிர மற்றை நாட்களிலுங்கூட ஸபை களிற் கலந்து பரிமாறி 'ஸௌலப்ய மொழியப் பரத்வமென்பது இவர்க்கு ஈஷத்தும் இசை யாது' என்றெண்ணும்படி நடந்துகொண்டவிதம் நெஞ்சை விட்டகலாது. இப்படி ப பெரியார்களின் பெருங்குணத்தைப் பற்றி இங்கு நாம் தெரிவிக்கவேண்டுவது மிக மி வுண்டாயினும் விரிவுக்கஞ்சி விடுக்கவேண்டியதாகிறது.

முக்கியமாக, அடியேனுடைய பரம [ஆப்தர்களிருவரின் புதல்வர்களான ஸ்ரீமா C.S.R. சக்ரவர்த்தி ஐயங்காரும், A. ராமாநுஜாசாரியும் இக்காரியமே கண்ணாகப் பரிச்ரம பட்ட விதங்களை அடியேன் நேரில் பார்த்து வியந்தவனாதலால் அவர்களைப்பற்றி இங்கெழு சொல்திறமறிகின்றிலேன். தவிர, ஆஸ்திகர்கள் எல்லோருமே மிகுந்த குதூஹலத்துட ஒத்துழைத்தார்கள். வடகலை தென்கலை ஸ்மார்த்தர் மாத்வர் என்னும் வாசியின்றி

http://acharya.org

உத்ஸாஹிகளாய் நடந்துகொண்ட விதங்களைப் பார்த்தபோது 'இதென்ன? இராமனுடைய கலியாணமாக இதை நினைத்திருக்கிறார்கள் போலும்' என்றே அடியேன்னெஞ்சில் பட்டது.

இம்மாநகரில் தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி ஆகிய மூன்று பாஷைகளிலும் அடியேனுடைய பிதற்றல்களுக்கு அவகாசமளித்த "காக்கை வாயிலுங் கட்டுரை கொள்வர்" "பல்லியின் சொல்லுஞ் சொல்லாக் கொள்வதோவுண்டு பண்டுபண்டே" என்று ஆழ்வார்களருளிச் செய்த கணக்கிலே கௌரவித்த குணாதிசயத்தை உள்ளபடி யெடுத்துரைக்க நேர்த்தியான சப்தங்கள் தெரியவில்லையே யென்கிற குறையுடன் இவ்விஷயத்தை முடித்து மேலே செல்கின்றேன்.

## ஹரித்வாரம்—ஹ்ருஷீகேசம்.

டில்லியிலிருந்து ஹரித்வாரம் வந்து சேர்ந்தோம். அடியேன் காஞ்சியிலிருக்கும் போது ஹரித்வாரத்தை நினைத்துக் கொண்டால் உடனே அவ்விடம் போய்ச் சேர்ந்து விடலாமாவென்று பலகாலும் நினைப்பதுண்டு. அவ்வளவு ஹ்ருதயங்கமமான இடமிது. இங்கு நமக்குக் கிடைக்கும் தனிப்பட்ட இடத்திற்குத் தனிப்பட்ட சிறப்புண்டு. விரஜா நதிக் கரையில் வாழ்வது போலவே இங்கு அடியேன் வாழ்வதுவழக்கம். உபாகர்மம் ஸமீபித்திருந்தபடியால் இதையுத்தேசித்து இவ்விடத்தில் ஒரு வாரம் ஆனந்தமாகத் தங்கியிருக்க நேர்ந்தது. அத்யாபக ஸ்வாமிகளும் கூடவே யெழுந்தருளியிருந்து திவ்ய ப்ரபந்தாநுஸந்தான கோஷ்டியைச் சிறப்பாக நடத்திவந்தார்கள். ஸ்ரீமத் பரமஹம்ஸ. திருமெய்யம் திருவேங்கட ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி வதரியாத்திரையை யுத்தேசித்துச் சில மாதங்களுக்கு முன்னமே புறப்பட்டு எழுந்தருளிக் கொண்டிருந்தவர் இவ்விடத்தில் கூடியிருந்து குளிர நேர்ந்தது. இங்கிருந்து ஹ்ருஷீகேசம் சென்று அங்கும் இரண்டு நாள் தங்கியிருந்து பிறகு வதரிவணங்கப் புறப்படலானோம். ஹ்ருஷீகேசத்தில் தங்குவதற்குப் பல விடங்களுண்டெனினும், நவீனமாக ஏற்பட்டிருக்கிற ஆந்த்ராச்ரமம் என்னுமிடம் ஏக காலத்தில் ஆயிரம் பேர்களும் தங்கியிருக்கக் கூடிய மிக விசாலமும் புனிதமுமான ஸ்தலமாதலால் இது பரம ஸௌகரியமான இடமென்னத்தகும். சிவானந்த ஸ்வாமிகளென்று ஜகத்ப்ரஸித்தரான மஹான் வாழுமிடமான ஆனந்தகுடீர மென்னும் மஹத்தரமான இடமும் இவ்விடத்துள்ளது. வதரிவணங்கித் திரும்பிவருகையில் அவ்விடத்தின் ஸௌகரியங்களையும் அநுபவித்தோம். அதைப் பற்றிப் பிறகு எழுதுவோம்.

## ஸ்ரீ பதரிகாச்ரம யாத்திரை

அடியேன் ஹரித்வாரபரியந்தம் பல தடவைகள் யாத்திரை செய்தவன். பதரிகாச்ரமத்திற்கு இது மூன்றாவது தடவையான யாத்திரை. 1943ஆம் வருஷத்தில் முதல்தடவையாகச் சென்றேன். 1949ஆம் வருஷத்தில் இரண்டாந்தடவை சென்றேன். இப்போது மூன்றாந்தடவை. யாத்திரையில் எவ்வளவு குதூஹலமிருந்தாலும் பதரிகாச்ரமம் செல்வது மிகக்கடினமான பயணமாதலால் ஒரு பிறவியில் ஒருதடவைதான் இது செய்ய ஸாத்யமாகும். அடியேன் முதல் தடவை வதரிவணங்கி மீண்டபோது நமது வாழ்நாளில் இவ்வொரு தடவை போதும் என்றே திண்ணமாக எண்ணி நின்றேன். அப்படியிருந்தும் அதன்பிறகும் இரண்டு தடவை வதரிவணங்க ப்ராப்தமான விது உண்மையில் அடியேனுடைய இச்சையினாலன்று. இதைப்பற்றின தத்துவத்தை இங்குச் சுருக்கமாகவாவது தெரிவித்தாக வேண்டுமென்று கையும் மனமும் காதலிக்கின்றன. 1949 ஆம் வருடத்தில் தேவப்பெரு


http://acharya.org


# கர ஹூ ஆவணிமீ ஸ்ரீபதரிகாச்ரம யாத்திரை.



மாளுடைய வையங்கண்ட வைகாசி யுத்ஸவத்தில் உலகமெல்லாம் வந்து திரளும் பெரியதிரு
வடிமஹோத்ஸவத்தன்று அடியேன் ஊரைவிட்டுப் புறப்பட்டேன். அப்போது உல
மறிந்தவொரு காரண விசேஷத்தினால் ஆலயந்தொழுவதை விலக்கிக்கொண்டிருந்தபடியா
எங்கேயாவது சென்று யமுனைக்கரையிலும் கங்கைக்கரையிலும் கிடந்து காலங்கழிப்பே
மென்கிற துணிவுடனேயே வெளிபேறினேன். கருணைக்கடலான கரிகிரிநாதன் கைவி
வானல்லனே. பிணியொழித்தமரர்பெருவிசும்பருளும் பேரருளாளனாய் நிற்குமிடமா
வதரியாச்சிரமத்திலே வலையிட்டுப் பிடித்திழுத்தான். வஞ்சக்கள்வன் மாமாயனாய் நெஞ்ச
முயிருமுள்கலந்து கைங்கரிய குதூஹலத்தை விளைத்து அதனை உலகமறியப் பரவவைத்த
மருளி 'இதற்காகவே உன்னை இங்கு வரவழைத்தேன்; சுகமேசென்று பாடியாடிப் பணி
தேத்தி வாழ்வாயாக' என்று விடை தந்தருள, ஆனந்தமாக விரைந்துவந்து சேர்ந்து கை
கர்யஸ்ரீயையநுபவித்துக் களித்தேன். பேரருளாளனென்னுந் திருநாமம் பொருந்துமுன
கேயென்று போற்றியுகந்தேன். வதரிநாதன் அங்ஙனே வரவழைத்து அருள் செய்யாவிடி
இன்னமும் விண்பிடிவாதங்கொண்டு விலகிநிற்பார் திரளிலே தலைவனாயிருந்து தொ
திருப்பேனே. அங்ஙனமாகாதபடி பேரருள் காட்டினபடிக்கு என்ன கைம்மாறு செ
வோமென்று இரண்டாண்டு ஆலோசித்து, மீண்டுமொருமுறை அவன் திருவடிவாரத்தே
சென்று—பெருந்திரளாய்ச்சென்று அருளிச்செயலை அவன் திருவுள்ளமுகக்கத் திருச்செ
சார்த்தச்செய்து வருவதற்கு மேற்பட வேறொன்றில்லையென்று அறுதியிட்டு மிக்க ஆன
யோடு புறப்பட்டது இம்மூன்றாவது தடவை.

http://acharya.org

ஹிருஷீகேசம் ஆனந்தகுடீர் கங்கைக்கரைவாசல்



பிரஹ்மஸ்ரீ, சிவானந்த ஸ்வாமிகள். காஞ்சீபுரம் P. B. A. ஸ்வாமிகள்.

http://acharya.org

வதரியின் வழி விசேஷங்களும் தங்குமிடங்களைப்பற்றின விவரணங்களும் முதலானவை முன்னிரண்டு யாத்திரைகளிலேயே 'வதரியாத்திரை விளக்கு' 'க்ஷேத்ரதீர்த்த யாத்திரை விளக்கு' என்னும் புத்தகங்கள் மூலமாக வெளிவந்திருப்பதால் அவற்றைப்பற்றின விரிவுகளை இங்கு விடுக்கவேண்டியதாயிற்று. வழி முழுதும் வதரிமுழுதும் அருளிச்செயல் கோஷமும் திருமந்த்ரார்த்த ப்ரவசனமுமாயிருந்ததுதான் இம்முறை யாத்திரையின் தனிப்பட்ட விசேஷம். ஆவணித்திங்கள் க்ருஷ்ணப்ரதமையன்று ஹ்ருஷீகேசத்திற்புறப்பட்டு சுக்லப்ரதமையன்று அவ்விடம் திரும்பிவந்து சேர்ந்தோம். ஸ்ரீ க்ருஷ்ணஜயந்தியும் பெரியவாச்சான் பிள்ளை சாத்துமுறையும் வதரிநாதன் திருவடிவாரத்தில் கொண்டாட ப்ராப்தமாயிற்று. அருளிச் செயல்களையும் ஸ்தோத்ரங்களையும் ரஹஸ்யங்களையும் ஆசைதீர ஸேவித்து எம்பெருமானுடைய அருள் வெள்ளத்தை அபரிமிதமாகப்பெற்று விடையும் பெற்றுக்கொண்டோம்.

## ஹ்ருஷீகேசம்—ஹரித்வாரம்

ஹ்ருஷீகேசத்தில் சிவானந்த ஸ்வாமிகளின் ஆனந்தகுடீரமென்னும் ஸ்தானத்தைப் பற்றி ஏற்கெனவே ப்ரஸ்தாவித்திருக்கிறேன். இந்த ஸ்வாமிகளின் ப்ரபாவம் தென்னாடும் வடநாடும் நன்கறிந்ததே. இரண்டாண்டுகட்குமுன்பு இவர்கள் தென்னாட்டு யாத்திரையாகப் புறப்பட்டுச் சென்னைமாநகரிலும் சுற்று நகர்களிலும் விஜயஞ்செய்திருந்தபடியால் இவர்களது பெருமைகளையறியாதார் மிகச்சிலருமிருக்கமுடியாது. இவர்கள் இங்கு கங்கைக்கரையில் புனிதமான மிகப்பெரிய ஆச்ரமத்தை ஆனந்த குடீரமென்னும் பெயரால் அமைத்துக்கொண்டு தவவடிவமாகத் திகழ்வது நம்போல்வாரது பேச்சுக்குமெழுத்துக்கும் நிலமன்று. நூற்றுக்கணக்கான பண்டிதர்கள் இவரையடிபணிந்து வாழ்கின்றனர். இவர்கள் இங்கு செய்திருக்கும் ஆலயப்ரதிஷ்டாபனம் புஸ்தகாலய ஸ்தாபனம் அரிய பெரிய காட்சித்தாபனம் அஹோராத்ர அகண்டபஜன ஸங்கீர்த்தன நியமனம் முதலானவைகளைப் பற்றிச் சொல்லவேணுமானால் அதிமாநுஷக்ருத்யம் என்கிற ஒரு சொல்தான் சொல்லத்தகும். மஹாதபஸ்விகளான இப்பெரியாரை முதன்முதலாக இப்போதுதான் நாம் கண்டுபேசிக்களிக்க பாக்கியம் வாய்த்தது. அருமையான நிட்டை; ஆச்சர்யமான தவம்; அற்புதமான பணி; அதிகமென்சொல்லுவோம்! அந்தரங்கத்தூய்மைவாய்ந்த இப்பெரியார் பண்டைக்காலத்துப் பெரியார்களில் ஒருவராகப் பரிகணனை பெறத்தக்கவர். ஆயிரமுமிரண்டாயிரமும் சம்பளம்பெற்று உத்தியோகங்களிலமர்ந்திருந்த பெரியார்களும் லௌகிக சேவைகளை வெறுத்தொழித்துவந்து இங்கே சேவை புரிகின்றார்களென்றால் இப்பெருமை சொல்லுந்திறத்ததோ? ஆங்கிலத்தில் அளவுகடந்த புலமையின் பயனாக இவர்கள் வெளியிட்டிருக்கும்—வெளியிட்டுக்கொண்டிருக்கும் புத்தகங்களும் பத்திரிகைகளும் அபரிமிதம். இவ்வாச்ரமத்தில் நூற்றுக்கணக்கான பண்டிதர்கள் ஸ்வாமியுகந்த பணியைச்செய்வதே உத்தமமானதொண்டு என்று கொண்டு அநந்யப்ரயோஜனமாய் ஒவ்வொருவர் ஒவ்வொரு பணியை ஏற்றுக்கொண்டு நடையாடும் மிஷின்போல் நடத்திவருமதிசயத்தைக் கண்டு மிக வியந்தோம்.

இங்கு நாடோறுமிரவில் பக்தர்கள் யாவருமொன்றுகூடி அற்புதமான பஜனை நடத்திவருவதும் அந்தக் குழுவில் ஸ்வாமிகளும் அந்வயித்துத் தமது ஸௌசீல்ய குணத்தை உலகறியக் காட்டுவதும் போற்றத்தக்கதே. இக்குழுவில் நமது வாயினாலும் ஒரு சொற்பொழிவைக் கேட்க வேட்கைகொண்ட சுவாமிகளின் விருப்பத்தின்படியே இங்கு அஷ்டவித பக்தியைப்பற்றி ஒரு உபந்யாஸம் நடத்த நேர்ந்தது. இங்கு இவர்கள் நடத்திவருகிற முறையில் நமது தென்னாட்டில் ஓரிடத்திலும் ஒருவரும் ஏக தேசமும் நடத்த முற்பட

http://acharya.org

வில்லையே யென்கிற குறை நமது நெஞ்சை மிகவும் வாட்டியது. ஹ்ருஷீகேசத்தில் கங்கைக் கரையில் இனிமையான வாழ்ச்சிக் குரிய இடம் இஃதொன்றே. ஸ்வாமி வேங்கடேசானந்தா என்னும் மஹான் ஸ்வாமிகளுக்கு வலக்கைபோன்றிருந்து ஸர்வகார்ய துரந்தரராய் வாழ்கின்றார். இங்குச் சில நாள் ஆனந்தமாக வாழ்ந்திருக்க ருசியுண்டாகியும் அவகாசக் குறைவினால் மறுநாளே புறப்பட்டு ஹரித்வாரம் வந்து சேர்ந்து அங்கு நமக்கென்று ஏற்பட்டிருக்கும் "விரஜாதீர" பவனத்தில் மூன்றுநாள் விச்ராந்தி செய்துகொண்டு புறப்பட்டோம்.

## நைமிசாரணியம்—அயோத்யை

ஹரித்வாரத்திலிருந்து புறப்பட்டு நைமிசாரணியம் ஸேவித்துக் கொண்டு அயோத்தி யென்னுமணிநகரம் வந்து சேர்ந்தோம். இங்கு ஸரயூதீரத்தில் கோலாகாட்டென்னுமிடத்தில் ஸத்ருஸதனத்தைச் சார்ந்த தேவேந்திரபவனத்தில் மூன்று நாள் தங்கியிருந்து அருளிச் செயல்களினால் இராமபிரானை யுகப்பித்துப் பரமானந்த மெய்தினோம். இம்மாநகரில் இரண்டாயிரம் பக்தர்கள் கூடின மிக்க பெருஞ்சபை நடுவே ஸ்ரீராமகுணாநுபவ பரமான ஸம்ஸ்க்ருதோபந்யாஸம் செய்யவும் அதனால் அங்குள்ளார்க்கு அளவு கடந்த ஆனந்தம் விளையவும் ப்ராப்தமாயிற்று. தயரதன்பெற்ற மரதகமணித்தடத்தின் உள் வெள்ளத்தை "விதிவாய்க்கின்று காப்பாரார்?" என்கிற முறையிலே அநுபவிக்க நேர்ந்தவிது ஆத்மைக வேத்யமான ஆத்மானந்தம்.

## ப்ரயாகை—காசி—கல்கத்தா

அயோத்யையிலிருந்து (அலஹாபாத்) ப்ரயாகை சென்று சேர்ந்தோம். இவ்விடத்தில் த்ரிவேணீஸங்கமஸ்நானம் விசேஷம். கங்கையும் யமுனையும் கூடுவது கட்கூடாகவுள்ளது. "கங்காயமுநயோர் மத்யே யத்ர குப்தா ஸரஸ்வதீ" என்கிறபடியே ஸரஸ்வதி அந்தர்வாஹிநியாம். இந்த த்ரிவேணீஸங்கமத்தில் குடைந்தாடுதலும், பரத்வாஜாச்ரமம் முதலான ஸ்தல விசேஷங்களைக் காணுதலும் இங்கு விசேஷம். இவ்விடத்தில் கீடகஞ்ஜென் ஜென்னுமிடத்தில் ஸ்ரீ வேணீமாதவமந்திரத்தில் ஸ்ரீமதுபயவே. ஆஸூரி திருமலாசார்ய ஸ்வாமியின் அன்புக்கிலக்காகி மூன்று நாள் தங்கியிருந்தோம். சித்திரகூடம் ஸேவித்து வருவது இவ்விடமிருந்தேயாகும்.

ப்ரயாகையிலிருந்து காசீ க்ஷேத்ரம் சென்று சேர்ந்தோம். அங்கு நாகபூர் மஹாராஜாவின் போஸலாமந்திரமென்னுமிடமொன்றுதான் பரமரமணீயமான இடமென்பது எமது எண்ணம். அவ்விடத்தே தங்கியிருந்து அங்குள்ள பண்டித ஸஹ்ருதய ஸஹ்ருத்துக்களோடு குலாவிக்களித்து கயாமார்க்கமாய் கல்கத்தா சென்று சேர்ந்தோம். இங்கு ஜகன்னாதகாட்டென்னுமிடத்தில் பலதேவஜீமந்திரமென்னும் ராமாநுஜகூடத்தில் இனிது தங்கியிருந்தோம். இவ்வூரில் நம் நாட்டுத்தமிழரும் ஆயிரக்கணக்காக (உத்தியோக நிமித்தமாய்) வந்து சேர்ந்திருப்பதால் அவர்களுடைய த்ருப்தியை உத்தேசித்து ஒருவேளை தமிழுபந்யாஸமும், ஹிந்தீபக்தர்களின் த்ருப்தியையுத்தேசித்து ஒருவேளை ஹிந்தியுபந்யாஸமும் செய்ய நேர்ந்தது. முந்தினஸபையில், மஹாமஹோபாத்யாய ப்ரஹ்மஸ்ரீ. சின்னஸ்வாமி சாஸ்த்ரியாரவர்கள், ஸ்ரீ. உ.வே.R. லக்ஷ்மீநாராயணையங்கார் முதலான மஹநீயர்களின் அளவுகடந்த ப்ரீதிக்கு இலக்காகப்பெற்றது குறிப்பிடத்தக்கவிசேஷம். இங்கிருந்து புரீ ஜகன்னாதம் நோக்கினோம்.

http://acharya.org



உஜ்ஜயினி ராமாநுஜகூடம்.

குருட்வஜாசாரி.

(திருநாராயணபுரம் அக்காரக்கனி ஸ்வாமி திருவடி)



ப்ரயாகை வேணீமாதவ மந்த்ராதிக

ஸ்ரீ. உ. வே. ஆஸூரி.

திருமலாசார்ய ஸ்வாமி.

## ஜகன்னாதம்—சென்னை—காஞ்சி

ஜகன்னாதபுரியில் எத்தனைநாள் வாழ்ந்தாலும் பர்யாப்திபெறமுடியாது. இப்படிப்பட்ட மஹாக்ஷேத்திரத்தில் ஒரு பகலே தங்கியிருந்து புறப்படநேர்ந்தது. இங்கு எம்பெருமானுடைய விபவங்களுக்கு ஒரு குறையுமில்லை. ஸந்நிதியின் முகப்பில் எமார்மடமென்கிற ராஜகோபால மடத்தில் தங்கியிருந்து அங்குத்திரண்ட பண்டிதமணிகளோடும் மடாதிபதிகளோடும் அளவளாவி ஸ்வஸ்தானம் நோக்கிப் புறப்படலானோம்.

http://acharya.org

வழியிடையே ஸ்ரீகூர்மமும் ஸிம்ஹாசலமும் ஸேவிக்கவேண்டியிருந்தும், முன்பு கால் ஸேவித்திருந்தமைபற்றியும் கார்யகௌரவம்பற்றியுப் "தொழுமத்திசையுற்று நோக்கியே" என்ற கணக்கிலே தொழுது முடித்து 19—9—51 காலையில் சென்னைமாநகர்சேர்ந்து சிரகாலவிச்லேஷ விஷண்ணர்களான பக்த பாகவத ஸுஹ்ருஜ்ஜநங்களையுகப்பித்து அன்று மாலை ஸ்வஸ்தானம் சேர்ந்து திருப்பவித்ரோத்ஸவம் கண்டருளா நின்ற நம் பெருமாளுடைய ஐந்தாநாள் திருவோலக்கத்திலன்வயித்து. திருமுற்றத்தடியார்தங்க ளின்பமிகு பெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனேயிருந்து மகிழப்பெற்றதாயிற்று.

## உபஸம்ஹார விஜ்ஞாபனம்

அடியேன் பல பர்யாயங்கள் யாத்திரை செய்திருந்தாலும் இந்த விசை யாத்திரை அத்புதம் அங்யாத்ருசம் அதிபோக்யம் அபூர்வம் என்னத்தகும். எதனாலென்னில்; நானாவித யோக்யதைகள் பெற்ற ஆப்தர்கள் பலர் அநுபாதிகமான அன்புவாய்ந்து * தேனும் பாலும் நெய்யுங் கன்னலுமமுதுமொத்தே யென்னுமாபோலே குழைந்திருந்து செவிக்கினிய செஞ்சொற்களையே அநவரதம் அநுஸந்திக்கப் பாங்காயிருந்தது, "இப்படியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களேற்றமறிந்துகந்திருக்கையும்" என்று அலப்யலாபமாகச் சொன்ன புருஷார்த்தம் ஒரு நூறுநாள் அவிச்சின்னமாக ப்ராப்தமானதனாலே. கூட எழுந்தருளின ஸ்வாமிகளைத் திருவுருவப்படங்களில் ஸேவிக்கப்பெறுகிறீர்கள். இவர்கள் தவிர, வைச்யபாகவத பக்தர்களும் பலர். ஸ்வாமிகளின் திருவோலக்கத்தில், ஸ்ரீமான் உ. வே. திருநீர்மலை கோமடம் ராமாநுஜாசார்யஸ்வாமி சிறந்த யோக்யதையோடு கூடியிருக்கை மாத்திரமன்றிக்கே * குணநாமாகரோ மஹாந் * என்னும்படி பரமஸத்வநிதியானவர். மல்லியம் எம்பார் ஸ்ரீ கோபாசாரியர் ஸ்வாமி உத்தமகுணஸம்பந்நரான உயர்ந்த அத்யாபகர்; ஸதாசாரசீலர். கற்பூரம் பட்டப்பா வேங்கடாசாரியர் உபயவேத தூரந்தரரான உத்துங்ககுணசீலர். மணவாள திருவேங்கடாசாரியர் திவ்ய ப்ரபந்த ஸேவையில் நல்ல விரகர், கார்யநிர்வாஹகர். மாம்பள்ளம் பாஷ்யகாரர் அநேகவித யோக்யதாஸம்பந்நரும் ஸகல கார்யசதுரரும். சக்ரவர்த்தி வேங்கடாசாரியர்ஸ்வாமி சிரமப்பட்டு திவ்யப்ரபந்தங்களையோதின பரமாஸ்திகமனப்ரயாணஸம்பந்தமான காரியங்களில் பொறுப்பாளியாயிருந்தவர். மங்கலம் ராமாநுஜையங்கார் ஸ்வாமியின் திருக்குணங்களைப்பற்றித் தனியாகப் பேசவேணும்- இந்த யாத்திரையில் ஸகல கார்ய நிர்வாஹ தூரந்தரராய் இந்த ஸ்வாமி எழுந்தருளவேதான் ஒருவர்க்கும் ஒருவிதமான கிலேசமுமில்லாமல் யாத்திரை இனிது முடிந்தது. சென்ற மாசீமீ நடந்த மலைநாட்டுத்திருப்பதியாத்திரையிலும் இந்த யாத்திரையிலும் இந்த ஸ்வாமியினுடைய திவ்யகுணங்களை விசேஷித்து அநுபவிக்கப்பெற்றது அடியேனுக்குத் தனிப்பட்ட ஆனந்தம். மற்றும், ஆஸூரி வேங்கடாசாரி ஸ்ரீநிவாஸசிரோமணி P, B. ஸ்ரீநிவாஸப்ரப்ருதிகளும் உள்ளூர்புறமொத்த அன்பினராயிருந்து மகிழ்வித்த அதிசயங்களை விவரிக்க இங்கு இடம் போதாது. டில்லி. S கோதண்டராமன் வதரியாத்திரைக்கு மஹோபகர்த்தர்.

"பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கியாதொன்றுமில்லை."

நித்யஸ்ரீர் நித்யமங்களம்.

வடநாட்டுத்திருப்பதியாத்ரா வ்ருத்தாந்த விஜ்ஞாபனம்
முற்றிற்று.

http://acharya.org

ஸ்ரீ :

# டெல்லியில் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியின் ஷஷ்டியப்தபூர்த்திவிழாக் கொண்டாட்ட வைபவம்

## ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமிகளின் ஷஷ்டி யப்த பூர்த்திக்காக டெல்லியில் குதூஹல விழா.

எழுதியவர் : A. RAMANUJACHARI, B. A., Kovid (Hindi)
(Ministry of Commerce and Industry, New Delhi)

ஸ்ரீமத் வேதமார்க்கப் பிரதிஷ்டாபகாசாரிய உபயவேதாந்த பிரவர்த்தகராய் ஸ்ரீ வைஷ்ணவ குலதிலகராய் விளங்கும் காஞ்சீபுரம் மஹா வித்வான் ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியாரின் அறுபதாவது ஆண்டு விழா நடந்த மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் காஞ்சீபுரம், சென்னை மற்றும் பல இடங்களில் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது யாவரும் அறிந்ததே. இம்மஹோத்ஸவத்தின் தனிப் பெருமையைப் பற்றி விமர்சித்த அஹோபில மடப் பத்திரிகை ந்ருஸிம்ஹ ப்ரியா "ஸ்வாமியினுடைய ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் நடந்ததுபோல் இதுவரையில் யாருக்கும் நடந்தது கிடையாது; இனியும் அப்படி ஒருவர்க்கும் நடவாது" என்று எழுதியது மிகையன்று நம் நாட்டுத் தலை நகராகிய டெல்லியிலும் ஆஸ்திகர்கள் ஸ்வாமிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாட டாக்டர், ஸர். K. S. கிருஷ்ணன் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தனர். இற்கு மாஜி பெடரல் கோர்ட்டு ஜட்ஜு ஸர். S. வரதாசாரியார், பார்லியமென்ட்டெபுயுடி ஸ்பீகர் ஸ்ரீ M. அனந்த சயனம் அய்யங்கார், மாஜி அகௌன்டன்ட் ஜனரல் ஸ்ரீ V. S. ஸுந்தரம், ஸ்ரீ A. S. அய்யங்கார், டாக்டர், N. வைத்தியநாத அய்யர், இவர்கள் உபதலைவர்களாகவும் ஸ்ரீ S. R. S. ராகவன் கார்யதரிசியாகவும், ஸ்ரீ C. S. பார்த்தஸாரதி அய்யங்கார் பொக்கிஷதாரராகவும் நியமிக்கப் பட்டனர். இன்னும் எட்டு பேர்கள் கமிட்டி அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இக்கமிட்டியின் முயற்சியால் ஸ்வாமியின் திருநக்ஷத்ர தினத்தன்று (27—3—51)-ல் ஆஸ்திகர்கள் கூடி விழாவைக் கொண்டாடினர். இதோடு நிற்காமல் ஸ்வாமியை டெல்லிக்கு நேரில் வரவழைத்து அவருடைய சான்னித்தியத்தில் மறுபடியும் ஷஷ்டியப்த பூர்த்தியைக் கொண்டாட விருப்பம் கொண்டனர். ஸ்வாமியும் இவ்வேண்டுகோளுக் கிணங்கி காஞ்சீபுரத்திலிருந்து ஜூன் 9-ம் தேதி தமது சிஷ்யவர்க்கங்களுடனும், பல அத்யாபக வேதவித்துக்களுடனும் புறப்பட்டு ஆங்காங்கு பல க்ஷேத்திரங்களில் தங்கி உபய வேதபாராயணங்களைச் செய்து கொண்டும் அரிய உபன்யாஸங்களைச் செய்து கொண்டும் பத்ரிநாத் க்ஷேத்திரத்தை நோக்கி யாத்திரையாக எழுந்தருளினர்.

இதற்குள், டெல்லியில் நடக்கவிருக்கும் மஹோத்ஸவத்திற்காக ஸ்வாமிக்கும் மற்றவர்களுக்கும் தங்க வசதிக்கு ஏற்பாடு செய்தல், உபந்யாஸங்களுக்கு திட்டம் வகுத்தல், நிதி திரட்டல் முதலிய காரியங்களில் கமிட்டியார் இரவும் பகலும் ஈடுபட்டிருந்தனர். ஸ்வாமியின்

http://acharya.org

விஜயம் வெற்றிகரமாய் முடிய கமிட்டியார் அதி உத்ஸாகத்துடன் முயற்சி எடுத்துக்கொண்டது போற்றத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் முக்கியமாக பிரஸிடெண்ட் டாக்டர் ஸர். கிருஷ்ணனைப் பற்றியும் காரியதரிசி ஸ்ரீராகவனைப்பற்றியும் ஓரிரண்டு வார்த்தைகள் கூறுவது அவசியமாகும். டாக்டர் கிருஷ்ணன் விக்ஞான உலகத்தில் பிரசித்தி பெற்றவர். மேனாட்டு விஞ்ஞானிகள் போலன்றி இவர் பகவத் பக்தியில் ஆழ்ந்தவர். ஆண்டாள் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்த இவர் ஆழ்வார்களின் அருளிச்செயல்களிலும், விசேஷித்து பூர்வாசார்ய வியாக்கியானங்களிலும், மிகவிசேஷமாக ஈட்டிலும் அபிமானமுள்ளவர். இவருக்கு ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமியிடம் அளவுகடந்த பிரேமம் இருப்பதில் ஆச்சரியமில்லை இவரைப்போலவே காரியதரிசி ஸ்ரீ ராகவன் அவர்களும் ஞானநிதியான ஒரு சிறந்த வைஷ்ணவர். ராகவன் தம்பதியார்களை டெல்லிவாசிகள் நன்கறிவர். சமூகச்சேவையில் மெச்சத்தக்க பணியாற்றி வரும் பெரியோர்கள். 'எங்கள்கடன் பணிசெய்துகிடப்பதே' என்ற லட்சியம் கொண்டவர். எடுத்த காரியத்தை சுலபமாக்கும் திறமை வாய்ந்தவர்கள். இப்படிப்பட்ட உத்ஸாகிகளைக்கொண்ட கமிட்டியின் முயற்சி என் வெற்றிகரமாய் முடியாமல்போகும்?

ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி வெகு விமரிசையுடன் க்ஷேத்ர தீர்த்தயாத்திரை செய்துகொண்டு டெல்லிக்கு ஆகஸ்டுமீ 2-ம் தேதி மாலை எழுந்தருளினர். தலைநகரில் பிரஸித்தமான ஸ்ரீ ஸனாதனதர்மஸபை வெகு உத்ஸாஹத்துடன் ஸ்வாமியையும் அவருடன் வந்த நாற்பத்தைந்து பக்தர்களடங்கிய மஹா கோஷ்டியையும் தங்கள் விருந்தாளிகளாய் ஏற்றுக்கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன் கோயிலைச்சேர்ந்த தருமசாலையில் இருக்கச்செய்து ஸௌகரியங்களுக்கு நல்ல ஏற்பாடுகள் செய்தனர். இப்பேருதவிக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். தர்மசாலையை யொட்டியுள்ள 'கீதாபவன்' ஒலிபெருக்கி வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய உபந்யாஸ மண்டபம். இதை ஸ்வாமியின் ப்ரவசனங்களுக்குக் கொடுத்துதவின ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன் கோயில் அதிகாரிகளான ஸ்ரீ யுகளகிசோர பிர்லா அவர்களைப் பாராட்டவேண்டும்.

ஆகஸ்டு 3-ம் தேதி டெல்லி ப்ரபல ஆங்கில பத்திரிகை 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா தலைநகரில் ஆரம்பமாவதை அறிவித்து, ஸ்வாமியை அறிமுகப்படுத்தும் விதத்தில் அவரைப்பற்றி எழுதி வெளியிட்டதாவது—

"ஸ்ரீராமானுஜரால் நிர்வகிக்கப்பட்ட விசிஷ்டாத்வைத மதத்தைச் சேர்ந்த சிறந்த வேதாந்த ஞானியாவர் காஞ்சீபுரம் ஸ்வாமீஜ். அநேக கிரந்தங்கள் எழுதியவர்; ஸம்ஸ்கிருதம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு இப்பாஷைகளில் இவர் பிரசுரித்த புத்தகங்கள் 300-க்கு மேற்பட்டவை. வேதாத்யயனத்திற்காகத் தமது காஞ்சீபுரத்தில் ஒருபாடசாலை ஸ்தாபனம் செய்துள்ளார்; ஹிந்தி, ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகிய பாஷைகளில் 'ஸ்ரீராமானுஜன்' முதலான பெயர்களால் மாதப் பத்திரிகைகள் பிரசுரஞ்செய்துவருகிறார்." இப்படி டெல்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" எழுதியதுதவிர, இங்கு வெளிவரும் எல்லாப்பத்திரிகைகளும் அநேகமாக ஸ்வாமியின் உபந்யாஸ நிகழ்ச்சியைப்பற்றி முன் அறிவிப்பு பிரதிதினமும் பிரசுரித்துவந்தன.

ஸ்வாமியின் உபந்யாஸங்கள் 'கீதாபவன்' மண்டபத்தில் மாத்திரமன்றி தலைநகரத்தின் மற்றபாகங்களிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வெகு அத்புதமாக நடந்தது. லோடி காலனி, கரோல்பாக் என்ற டெல்லியின் உப-நகரங்களில் நடந்த ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி உத்ஸவத்திற்கும், ஸ்வாமியின் உபந்யாஸங்கட்கும் அங்குள்ள தென்னிந்திய ஆஸ்திகர் பலரும் வந்தனர். ஒவ்வொருதினமும் ஸ்வாமியின் சொற்பொழிவின் விஷயத்தை

http://acharya.org

யொட்டி விழாவிற்குப் பெயர் இடப்பட்டது. முதல்நாள் வேதத்திருநாள்; இரண்டாவது தினம் பிரபந்தத்திருநாள்; மூன்றாவது விழா—அன்று திருவாடிப்பூரம்—ஆண்டாள் திருநாள்; நான்காவது திருநாள் ராமாயண தினம்; ஐந்தாவது தினம் பாகவதத்திருநாள்; ஆறாவது நாள் கீதாதினம்.

ஸ்வாமிகளும் இந்த ஆறுநாட்களில் முறையே, "வேதங்களும் நமது ஆசார்யர்களும்", "ஆழ்வார்களும் அவர்களின் ஆதேசமும்" "ஆண்டாள் வைபவம்", "பாகவதமும் ஆழ்வார்களின் கண்ணனும்", "ராமாயண சரணாகதி" "கீதையின் ஸாராம்சம்" என்ற விஷயங்களைப்பற்றி அரும்பெரும் சொற்பொழிவாற்றினர். இக்கூட்டங்களுக்குத் தலைமைவகித்த மத்ய கவர்ன்மென்ட் மந்திரிகள் ஸ்ரீ. என். வி. காட்கில், ஸ்ரீ. ஆர். ஆர். திவாகர், ஸ்ரீ. கே. சந்தானம் ஸ்ரீ. எம். திருமல்ராவ், ஸ்ரீ. M. அனந்தசயனமையங்கார், ஸ்ரீ. கே. எம். முன்ஷி முதலியோர் இவ்விழாவில் தாங்கள் கலந்து கொள்வதை பெறுதற்கரிய ஒரு கௌரவமாகக் கொண்டனர் என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

தினம் காலையில் 7-மணிக்கு ஸ்வாமியும் அவரது கோஷ்டியாரும் பாராயணம் செய்த வேதகோஷத்தைக் கேட்டனுபவிக்கக் குழுமின தென்னிந்திய வட இந்தியர்களின் கூட்டமென்ன, சாயங்காலங்களில் ஸ்வாமியின் மணிப்பிரவாள மாலையொத்த உபந்யாஸங்களை ச்ரவணம் செய்யக்கூடின திரளென்ன, ஸ்வாமியின் தமிழ், ஸம்ஸ்கிருதம், ஹிந்தி ப்ரவசனங்களை மணிபோவது தெரியாமல் கேட்டுக்கொண்டு ஆனந்த பாஷ்பம் சொரிந்த பக்த கோடிகளின் 'ஆஹா' காரமென்ன! தன்கிருபையை பூர்ணமாக நம் ஸ்வாமிக்கு அளித்திருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணனே இவ்வைபவங்களைக் கண்டனுபவிக்க அர்ச்சாவதார ஸமாதியைக்கடந்து 'கீதா பவன்' மண்டபத்தில் சான்னித்தியமாயிருந்தாரென்றால், மிகையாகாது.

இப்படி ஆகஸ்டு மூன்றாந் தேதியிலிருந்து எட்டாந் தேதிவரை, ஆறு நாட்கள் ஸ்வாமியின் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவம் டெல்லியில் அதிவிமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. இந்த ஒரு வாரமும் இந்நகரில் ஆஸ்திகர்களின் நடுவே ஸ்வாமிகளின் உத்ஸவத்தைப் பற்றித்தான் பேச்சு. உத்ஸவ ஆரம்ப தினத்திலும் கடைசி நாளிலும் பிருந்தாவனத்திலிருந்து ஸ்ரீரங்கஜீகோயில் தர்மகர்த்தாக்கள் மாலை பீதாம்பரம் இவைகளை அனுப்பி நம் ஸ்வாமியை கௌரவித்ததைப் பாராட்டவேண்டும். உண்மையாக, இச்செயலால் அக்கோயிலை இன்று 100 வருடங்களுக்குமுன் ஸ்தாபனம் செய்த—வட இந்தியாவில் நம் தென்னாசாரிய சம்பிரதாயத்தை நிலைநாட்டிய—மஹா பண்டிதர், தர்க்கசிங்கம் ஸ்ரீ தென்னேரி அகரம் கந்தாடை ரங்காசாரியர் ஸ்வாமியையே கௌரவித்ததாகும்.

ஓரிரண்டு விஷயங்களை இங்கு அவசியம் குறிப்பிடவேண்டும். ஒன்று, ஸ்வாமியின் இணையற்ற இந்த ஷஷ்டியப்தபூர்த்தி விழாவில் நம் வட இந்திய ஆஸ்திகர்கள் அதி உத்ஸாகத்துடன் ஒத்துழைத்த சிறப்பு. இரண்டாவது, எல்லா ஹிந்துக்களும்—தென்கலை, வடகலை, ஸ்மார்த்தர், மத்வர் என்ற எவ்வித வித்யாச உணர்ச்சியுமின்றி ஒருவரையொருவர் மிஞ்சுபவர் போல் விழாவில் பங்கெடுத்துக்கொண்ட சிறப்பு. இவ்விழாவை ஆஸ்திகர்கள் திருநாள் என்றாலும் பொருந்தும். பொதுவாக, கமிட்டியார் இவ்விழாவை 'ஞானச்சுடர் விழா' என்று மகுடமிட்டது மிகமிகச் சாலப் பொருந்தும். ஆஸ்திகர்களுள் ஐக்கியபாவத்திற்கு இதை ஒரு புது சகாப்தமெனக் கூறலாம். மூன்றாவது, உத்தரதேச பண்டிதர்களை பிரமிக்கச்செய்த ஸ்வாமியின் உணர்ச்சி ததும்பும் ஸம்ஸ்கிருதம், ஹிந்தி சொற்பொழிவுகள். டெல்லி ஸனாதன ஸபையினர், ஸ்வாமியின் ஆழ்ந்த ஸம்ஸ்கிருத ஞானத்தை மிகக்கொண்டாடினர். ஸ்வாமியை தங்கள் விருந்தினராக அமைத்துக்கொண்டு கௌரவித்தது போதாதென்று முதல்நாள் வரவேற்பின்போதே அவர்கள் ஒரு தங்கத்தகடி சால்வையை ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்து, ஸ்வாமியிடத்தில் தங்களுக்குள்ள அபார மதிப்பை பிரகடனம் செய்தனர்.

http://acharya.org

ஸ்வாமியின் வேதவொலியும் கர்ணாம்ருதமான உபந்யாஸத்வனியும் காதில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன என்பர் பலர்.

இம்மஹோற்சவத்தில் ஒவ்வொருநாளும் நடந்த வைபவத்தைப்பற்றி இனி சற்று விவரமாய் அனுபவிப்போம்.

---

டெல்லி, ஆகஸ்டு 3.

# 1. வேதத் திருநாள்

### டெல்லியில் தினந் தோறும் ஸேவாகால வேத பாராயணம்.

ஸ்வாமி டெல்லியில் எள்ளியிருந்த ஒரு வாரமும் தினம் காலையில் அவரும் அவருடைய கோஷ்டியாரும் ஸ்ரீ லக்ஷ்மிநாராயணன் கோயில் கீதாபவனில், வேத பாராயணமும் திவ்ய ப்ரபந்த ஸேவையும் செய்துவந்தனர். இச்சேவா காலம் இக்கோயிலின் சரித்திரத்தில் முதன் முதலாகும். இதைக் கேட்டானந்திக்க பல வட இந்திய பண்டிதர்களும் பிரஸன்னமாயிருந்தனர். பாராயண விழா இன்று காலை 8-மணிக்கு ஆரம்பித்துவைக்கப்பட்டது. அச்சமயம் இப்பாராயண உத்ஸவ அரங்கேற்றம் நடத்திய ரிடையர்ட் அகௌன்டன்ட் ஜனரல் ஸ்ரீ.வி எஸ். ஸுந்தரமய்யங்கார் கூறினதாவது: "இந்த உத்ஸவத்தில் கலந்து கொள்ளக் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். ஸ்வாமியை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை. அவரைத் தெரியாதவரும் கிடையாது, அவருடைய கிரந்தங்களைப்பற்றி அறியாதாருமில்லை. ஸ்வாமியை எனக்குப் பல வருடங்களாய்த் தெரியும். ஆனால் நேரில் தண்டம் சமர்ப்பிக்கும் பாக்கியம் சில வருடங்களுக்கு முன்பு தான் கிடைத்தது. ஸ்வாமிகள் சுமார் 40 வருஷமாய் நமது ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத்திற்காக இரவும் பகலும் உழைத்து வருகிறார். இப்பெரியாருடைய ஜீவிய லட்சியம்—மறைந்துபோன பல அரிய கிரந்தங்களை மீண்டும் பிரசுரம் செய்வது, ஆழ்வாராசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கு எளிய நடையில் அற்புதமான உரைகள் எழுதுவது, இமயமலையிலிருந்து சேதுபர்யந்தம் ஆயிரக்கணக்கான ஸத்ஸங்க காலக்ஷேப உபன்யாஸங்கள் செய்வது, வேத வேதாந்த அத்யயனத்திற்குப் பாடசாலை நிறுவுவது, பொதுவாக ராமாநுஜ தர்சனத்திற்குவேண்டிய பிரசாரம் செய்வது.—இந்த லட்சியத்தைப் பூர்த்தி செய்து, அதன் மூலம் ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு சேவை செய்வது என்ற ஒரே நோக்கத்திற்காக தமது வாழ்நாளை இந்தஸ்வாமி அர்ப்பணம் செய்திருக்கிறார். இவைகளுக்கெல்லாம் காரணம் இவரிடத்தில் பகவானுக்கும் நம் ஆசாரியர்களுக்கு முள்ள கிருபைதான். நாமும் இம்மஹானின் அரிய கிரந்தங்களைப் படித்தும், உபன்னியாஸங்களைக் கேட்டும் ஆசாரியர்களின் கிருபைக்குப் பாத்திரமாவோமாக" (கரகோஷம்) ஸநாதன தர்ம ஸபையைச் சேர்ந்த பண்டிட் கோஸ்வாமி அகர்வால் நம் ஸ்வாமிக்கு வரவேற்பளித்துப் பேசுகையில், ஸ்வாமி டில்லிக்கு எள்ளியிருப்பதை அவர்கள் சபை மிகப்பெரிய கௌரவமாகக் கொள்வதாயும், வட இந்திய தென்னிந்திய பண்பு, நாகரீகம் இவைகளில் மூலாதாரமாக அதிக வித்தியாஸமில்லையென்றும், வேதம் யாவருக்கும் புனிதமானதென்றும் சொன்னார். மேலும் பேசுகையில் ஸ்வாமியின் அத்யாச்சரியமான பாண்டித்யத்தைக் குறிப்பிட்டு அவரிடம் தங்களுக்குள்ள பக்தியைப் பிரகடனம் செய்தார்.

பிறகு ஸ்வாமிகளும் அவர் கோஷ்டியாரும் 10-30 மணி வரையில் கர்ணாம்ருதமாய் வேத பாராயணமும் திவ்யப்பிரபந்த ஸேவாகாலமும் செய்தனர்.

http://acharya.org

# ஞானச்சுடர் விழா ஆரம்பம்.

**ஸ்ரீ அண்ணங்கராசாரியருக்கு டெல்லியில் அமோக வரவேற்பு.**

## ஷஷ்டியப்தபூர்த்தி உத்ஸவத்தை, கனம். காட்கில் உத்காடனம் செய்த வைபவர்.

பதுடேல்லி, ஆகஸ்டு 3.

இன்று சாயங்காலம் 6-30 மணிக்கு ஸ்ரீ அண்ணங்கராசாரியாரின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் டெல்லியில் அதி உத்ஸாகத்துடன் கீதாபவனில் ஆரம்பமாயிற்று. மத்ய கவர்ன்மென்ட் மந்திரி கனம் என். வி. காட்கில் தலைமை வகித்தார்.

6-மணிக்கு, ஸ்வாமிகள் தர்மசாலையில் தம்முடைய இருப்பிடத்திலிருந்து வேதங்கள் கோஷிக்க, ஆஸ்திகத்திரள்சூழ லக்ஷ்மிநாராயணன் கோயிலை நோக்கி பவனியாக அழைத்து வரப்பட்டார். கோயிலின் வாசலில் ஸ்வாமியை கனம் ஸ்ரீ காட்கில், வரவேற்புத் தலைவர் டாக்டர் ஸர். கிருஷ்ணன், இன்னும் மற்ற பெரியோர்களும் பூர்ணகும்பத்துடன் எதிர்கொண்டழைத்து, 'கீதா பவன்' விழா மண்டபத்திற்கு எழுந்தருளப் பண்ணினர். அவ்வமயம், பிருந்தாவனத்திலிருந்து ஸ்ரீரங்கநாத தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் தனிச்சிறப்புடன் அனுப்பிய மாலையை ஸ்வாமிக்குச் சாத்தி மரியாதை செய்யப்பட்டது.

மூன்று தர்சனஸ்த்தர்களும் பல மாகாணங்களிலிருந்து உத்யோக முறையில் இங்கு வந்திருக்கும் ஆண்களும் பெண்களும் 6-மணியிலிருந்தே ஹாலில் குழுமியிருந்தனர். மண்டபத்திற்குள் ஸ்வாமி நுழைந்ததும் பலத்த கரகோஷம் வானைப்பிளந்தது. உபன்னியாஸ மேடையில் ஸ்வாமி அமர்ந்ததும், ஸ்ரீமதி ஸ்வர்ணலக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி மதுரமான கீதங்கள் பாடினர். வரவேற்புக் கமிட்டித் தலைவர் மாபெரும் விக்ஞானி டாக்டர் ஸர். K. S. கிருஷ்ணன், டெல்லி மஹா ஜனங்கள் சார்பாக ஸ்வாமிக்கு ஸ்வாகதம் கூறினர். அவர் ஆங்கிலத்தில் பேசினதின் ஸாராம்சம் வருமாறு :

சபையோர்களே,

இவ்விழாவின் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக நம் ஸ்வாமிக்கும் ஸ்வாமியுடன் கூட எழுந்தருளியிருக்கும் மஹநீயர்களுக்கும் மற்றும் நம்மழைப்புக்கிணங்கி இங்குக் கூடியிருக்கும் பெரியோர்களுக்கும் நான் அன்பார்ந்த வரவேற்பளிக்கின்றேன். இதைப்போன்ற சமயங்களில் எந்த பாஷையில் பேசுவது உசிதம் என்பதை அறிவேன். அது ஸம்ஸ்கிருதம்,



http://acharya.org

இல்லாவிட்டால் ஹிந்தியாகத்தானிருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் நான் அன்னிய பாஷையில் பேச நேர்ந்ததற்கு மன்னிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். சில நாட்களுக்கு முன்பு ஸ்வாமிகளின் ஷஷ்டியப்தபூர்த்தி விழா பல ஊர்களில் வெகு விமரிசையாக நடைபெற்றது. சென்னையிலும் காஞ்சீபுரத்திலும் இவ்விழா விசேஷித்துக் கொண்டாடப்பட்டது. டெல்லியிலும் (27—3—51ல்) கொண்டாடினோம். அச்சமயம் ஸ்வாமியை இங்கு வரவழைக்க முடியவில்லை. ஸ்வாமியும் அவருடன் சில பெரியோர்களும் இப்போது திவ்ய தேச யாத்திரையாக வட இந்தியாவுக்கு எழுந்தருளி யிருக்கிறார்கள். ஸ்வாமியை நேரில் டெல்லிக்கழைத்து இன்னொருமுறை விசேஷித்துக் கொண்டாட வேண்டு மென்று எங்களுக்குஆசை. மறுபடியும் அறுபதாவது ஆண்டு விழா கொண்டாடுவது ஒரு வியாஜம். ஸ்வாமியையும் அவருடைய கோஷ்டியையும் ஒருவாரம் நேரில் சேவித்து, அவரு டைய உபந்யாஸங்களைக் கேட்டு அனுபவிக்க வேண்டுமென்பதுதான் எங்கள் உண்மை நோக்கம். இதற்கிணங்கி, நமது மனோரதத்தைப் பூர்த்திசெய்த ஸ்வாமியின் பேருபகாரத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"ஸ்வாமியினுடைய பெருமையைப் பற்றியும் அவர் செய்துள்ள அரிய பெரிய ஸம்பிர தாய ஸேவைகளைப் பற்றியும் விசேஷித்துப் பேச இப்போது அவகாசமில்லை. நாளைய தினம் ஸ்வாமியின் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பதால் அவ்வமயம் ஸ்வாமிகளைப் பற்றி சற்று விஸ்தாரமாகப் பேச அவகாசம் ஏற்படலாம். இப்பெரியார் இயற்றிய நூல்களைப்பற்றியும் நமது ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு ஆற்றிய மாபெருந் தொண்டுகளைப் பற்றியும் ஒரு வார்த்தையில் கூறவேண்டுமானால் அது "அத்யத்புதமானது," "அளவிடற்கரிது" என்று தான் கூறவேண்டும். இது என்னுடைய அபிப்ராய மாத்திர மன்று, ஸ்வாமியின் நூல்களைப் பழக்கச் சேவித்த ப்ராமாணிகர்களனைவருடைய அபிப்ராய மும் இதுவே. நம் பூர்வாசார்யர்களில் எம்பெருமானார் போல்வரரோடுதான் ஸ்வாமியை ஒப்பிடவேண்டும். இன்று தம் பரிவாரங்களுடன் ஸ்வாமி திவ்ய தேச யாத்திரை செய்வது சுமார் 900 வருடங்களுக்கு முன் போதாயன விருத்தியின் ஸ்ரீ கோசங்களைத் தேடிக் கொண்டு எம்பெருமானார் காஷ்மீருக்கு எழுந்தருளினதை ஞாபக மூட்டுகிறது. ஸ்வாமி நம்முடன் எழுந்தருளியிருக்கும் ஒரு வாரமும் ஒரு பெரிய திருநாளாக நடை பெறுமென்று நான் சொல்லவேண்டியதில்லை. எத்தனையோ நெருக்கமான ராஜ காரியங்களுக்கிடையே நம் அழைப்புக்கிணங்கி இங்கு விஜயம் செய்துள்ள நம் கனம் மந்திரி ஸ்ரீ காட்கில் அவர் களுக்கு நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் ஸ்வாமியைப் போலவே இவ்விழாவும் அநேக முறையில் இணையற்றது. இதை ஆரம்பித்து வைக்குமாறு நம் கனம் மந்திரியை வேண்டிக் கொள்கிறேன்."

(கரகோஷம்)

பலத்த கரகோஷத்தின் நடுவே எழுந்து விழாவை உத்காடனம் செய்துவைத்த ஸ்ரீ காட் கில் ஹிந்தியில் பேசும்போது இந்த மஹா வித்வானின் அறுபதாவது ஆண்டு மஹோத்ஸவத் தில் கலந்து கொள்வதை தான் ஒரு பெரும் பாக்கிய மென்றே கருதுவதாயும் இவ்விழா பூர்ண வெற்றியுடன் நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை என்றும் கூறினர்.

பிறகு கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ. S. R. S. ராகவன் சென்னை பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னர், ஜட்ஜ் ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடு, ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு, மத்ய கவர்ன்மெண்ட் உப-மந்திரி ஸ்ரீ கர்மாகர் முதலியோரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.

http://acharya.org

ஸ்வாமிக்கு தமிழ், ஹிந்தி, ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் இப்பாஷைகளில் வரவேற்புப் பத்திரங்கள் டெல்லி ஆஸ்திக மஹாஜனங்கள் சார்பாகப் படித்துக் கொடுக்கப்பட்டன.

இச்சந்தர்ப்பத்திற்கென்றே தமிழ், ஹிந்தி, ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் இந்நான்கு பாஷைகளிலும் புனையப்பட்ட சாற்றுக் கவிதைகளும் வாசிக்கப்பட்டன.

டெல்லி சனாதன தர்ம சபை, ஸ்ரீ வைஷ்ணவ சபை முதலிய சுமார் இருபது சங்கங்கள் ஸ்வாமிக்கு மாலை சூட்டின. டெல்லி சனாதன சபையின் சார்பாக........ஸ்ரீ ஸ்வாமிக்கு சிறந்த பீதாம்பரமொன்றை சமர்ப்பித்து தங்கள் நன்மதிப்பைத் தெரிவித்துக் கொண்டார். ஸ்வாமியை அப்போது சேவிக்க ஆயிரம் கண்ணிருந்தாலும் போதாது.

வரவேற்புப் பத்திரங்களைக் கொண்ட ஒரு சித்திர வேலைப்பாடுள்ள பேழையை ஸ்ரீகாட்கில் ஸ்வாமிக்குச் சமர்ப்பித்து, ஒரு தங்கத் தகடி சால்வையையும் ஸ்வாமிக்குத் தமது கையால் சாத்தித் தம் அஞ்சலியைச் சமர்ப்பித்தார்.

இதற்குப் பிறகு ஸ்வாமிகள் 'ஜே' கோஷத்தின் நடுவே பேசின பேச்சுக்களாவன:—

"இங்குத் திரண்டு காட்சியளிக்கும் மஹாஜனங்கள்—ஆண்களும் பெண்களும்—எனக்கு அளித்திருக்கும் இக்குதூஹல வரவேற்புக்காக நான் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். கண்ணனது அடிச்சுவடு கொண்ட இப்புனித மஹா நகருக்கு கடந்த சில வருடங்களாக யாத்திரைகளின்போது வந்து தங்க நேர்ந்ததுண்டு எனக்கு; அவ்வமயம் இங்குள்ள ஆஸ்திகர்களின் கட்டளைக் கிணங்கிச் சில உபன்னியாஸங்களைச் செய்யவும் நேர்ந்ததுண்டு; இவ்விடமுபந்யாஸத்திற்கென்றே அழைக்கப்பட்டு வந்துபோக நேர்ந்ததுமுண்டு. ஆனால் இன்றைய சந்தர்ப்பம் தனிப்பட மேம்பட்டது. இப்போது நடைபெறும் வைபவங்களுக்காக உங்களுக்கு எவ்விதம் எனது நன்றியைச் செலுத்தமுடியும்? அது வார்த்தைகளின் சக்திக்குப் புறம்பானது. இன்று நீங்கள் வரவேற்புப் பத்திரங்களிலும், வாழ்த்துப் பாட்டுக்களிலும் என்னை மிகவுயர்த்திப் பேசியிருக்கிறீர்கள். என்னிடமுள்ள தோஷங்களை அறவே மறந்துவிட்டீர்கள்; அல்லது அவற்றைக் குணமாகவே கொண்டுவிட்டீர்கள் போலும். இது, இம்மாநகரப் பெரியோர்கள் என்னிடம் வைத்திருக்கும் வாத்ஸல்யமென்பதோர் அன்பைக் காட்டுகிறது. நீங்கள் என்னிடம் இருப்பதாகச் சொல்லிய, (அல்லது இருக்கவேண்டுமென்று விருப்புகிற) அரிய பெரிய குணங்கள், நான் இன்னும் ஒரு அறுபது வருடம் இருந்தால் என்னால் சம்பாதிக்க முடியுமோ என்னவோ!"........

இப்படி நம் ஸ்வாமி கிருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொண்டு, "வேதமும் நமது ஆசார்யர்களும்" என்ற ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். வேதம், உபநிஷத், ஆழ்வார் பாசுரங்கள் இவைகளிலிருந்து பல மேற்கோள்களை அநாயாஸமாக எடுத்துக் காட்டி, நம் ஆசாரியர்கள் உண்மையாக "வேதமார்க்கப் பிரதிஷ்டாபனாசார்யர்கள்" என்ற விருதுக்கு ஏற்றவர்கள் என்று நிரூபித்த அழகை, அவர் சொல்லித்தான் கேட்கவேண்டும். ஸ்வாமிகள் தமது அழகிய பிரசங்கங்களை வியாஸங்களாக எழுதித் தமது பத்திரிகைகளில் வெளியிடவேண்டுமென்பதே பக்த கோடிகளின் பிரார்த்தனை.

ஆலத்தி, மங்கள கீதங்கள் இவைகளோடு இரவு 9-30 மணிக்கு 'ஸ்வாமிக்கு ஜே!' என்ற ஜெய கோஷத்துடன் முதல் நாள் விழா விமரிசையாக நடந்தேறியது. இன்றைய விழா அபூர்வ லாபமென்பதே பலர் அபிப்ராயம்.

http://acharya.org

# 2. பிரபந்தத் திருநாள்

## ஸ்ரீ அண்ணங்கராசாரியாரின் திருவுருவப்படம் திறந்துவைக்கப்பட்டது.

## நம் ஸ்வாமி ஸ்ரீமத் வேதமார்க்கப் பிரதிஷ்டாபனசார்யர்

### மாபெரும் விக்ஞானி. ஸர். கிருஷ்ணனின் அஞ்சலி.

'ஞானச் சுடர் விழா'வின் இரண்டாவது தினமான பிரபந்தத் திருநாள் கீதாபவனி... சாயங்காலம் 6-மணிக்கு ஆரம்பமாயிற்று. இன்று சனிக்கிழமை பிற்பகல் ஆபீஸ்களுக்கு விடுமுறை யாதலால், டெல்லியின் பல பாகங்களிலிருந்தும் ஆஸ்திகர்கள் திரள் திரளா... விஜயம் செய்தனர். கூட்டத்திற்கு மாபெரும் விக்ஞானி டாக்டர் ஸர். கே. எஸ். கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

குமாரி வஸந்தா ஸோமசுந்தரமும் ஸ்ரீமதி சுகுந்தா ராமனும் ஆழ்வார் பாசுரங்க... லிருந்து பிரார்த்தனை கீதங்கள் பாடினர்.

மதராஸ் ஷஷ்டி யப்த பூர்த்தி கமிட்டியாரால் தயவு கூர்ந்து டெல்லி கமிட்டிக்கு அளிக்கப்பட்ட ஸ்வாமிகளின் பெரிய திருவுருவப்பட மொன்றைத் திறந்து வைக்குமாறு ஸ்ரீ S. R. S. ராகவன், டாக்டர் கிருஷ்ணனைப் பிரார்த்தித்தார். அவ்வமயம் அவர் (ராகவன்) வருமாறு கூறினர்.

"டாக்டர் கிருஷ்ணன் உலகப் பிரஸித்தி பெற்ற விக்ஞானி. இவர் மேனாட்டு விக்ஞானிகள் போலல்லாமல் இறைவனிடம் நம்பிக்கை பூண்டவர். மேலும் நம் ஸ்வாமி யிடம் அதிக ப்ரேமை கொண்டவர். ஸ்வாமியின் கிரந்தங்களை நன்கு படித்தவர். ஆகை யால் ஸ்வாமியின் திருவுருவப் படத்தைத் திறந்துவைக்க இவரே மிகத் தகுதியானவர். இவ... இக் கைங்கரியத்தைச் செய்யுமாறு நான் வேண்டிக் கொள்கிறேன்."

இப்படி ஸ்ரீ ராகவன் பேசினதும், டாக்டர் கிருஷ்ணன் ஸ்ரீ அண்ணங்கராசாரியாரின் திருவுருவப்படத்தை "ஸ்வாமிக்கு ஜே!" என்ற கரகோஷத்தின் நடுவே திறந்து வைத்து பேசின பேச்சுக்களின் சுருக்கம்—

"நம் ஸ்வாமியின் படத்தைத் திறந்துவைக்கும்படியான பாக்யம் அடியேனுக்கு இன்று கிடைத்திருக்கிறது. அதற்கு முதன் முதலாக என்னுடைய க்ருதஜ்ஞதையை இந்த சபையோ ருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்** என்று சில பெரியோர்கள் விருது பிடிக்கி... களே: நாமும் மஹநீயர்களுக்கு உபசார வார்த்தையாக உபயோகித்து வருகிறோமே: அந்த வா... தையை மேற்கோளாகக் கொண்டு ஒரு அரிய உபந்யாஸம் நேற்று இம்மண்டபத்தில் நம் ஸ்வா...

http://acharya.org

செய்தருளினார்கள். வேதமென்றால் என்ன ? வேதமார்க்க மென்பது யாது ? அதைப் பிரதிஷ்டாபனம் பண்ணுவதெப்படி ? என்ற விஷயங்களைப்பற்றி என் போன்றவர்களின் மனதையும் கவரும்படியாகச் சொற்பொழிவு ஆற்றினார்கள். தைத்திரீய உபநிஷத்தில் மூன்று மகரிஷிகள் கூடி தபஸ்ஸென்றால் என்ன ? என்று விசாரம் செய்தார்களாம். [ஸத்யமிதி ஸத்யவசா ராதீதர :] தபஸ்ஸென்பது ஸத்யத்தை என்று நிர்வஹித்தாராம் ராதீதரரென்ற மகரிஷி; ஸத்யம் தவிர வேறுசொல்லி யறியாதாராகையாலே. [தப இதி தபோநித்ய : பௌருசிஷ்டி :] தபஸ்ஸென்பது தபஸ்ஸைத்தான் என்று தீர்ந்தமுடிவாக நிர்ணயித்தாராம் பௌருசிஷ்டி என்ற இரண்டாவது மகரிஷி; அவர் தபோநிஷ்டராகையாலே. இந்தக் கேள்வி எழுவதற்கே ப்ரஸக்தி யில்லை யென்பதும் அவருடைய அபிப்ராயம்போலும். [ஸ்வாத்யாயப்ரவசநே ஏவேதி நாகோ மௌத்கல்ய :] ஸ்வாத்யாய ப்ரவசனங்களே தபஸ்ஸு; தாம்வாட வாடச் செய்யும் தபஸ்ஸு தபஸ்ஸல்ல என்று அறுதியிட்டாராம் மூன்றாவது மகரிஷியான மௌத்கல்யர்.

இவருடைய நிர்ணயத்திற்கு ஒரு ஏற்றமுண்டு. மற்ற இரண்டு மகரிஷிகளையும் பற்றிச் சொன்னமாதிரி "இவர் ஸ்வாத்யாயப்ரவசனத்தில் ஈடுபட்டவராகையாலே" என்று உபநிஷத்து கூறவில்லை. மேலும் மௌத்கல்யரின் நிர்வாஹத்தை அங்கீகரித்து [தத் ஹி தபஸ் தத் ஹி தப :] ஸ்வாத்யாயப்ரவசனங்களே தபஸ்ஸு ! ஸ்வாத்யாயப்ரவசனங்களே தபஸ்ஸு !! என்று இரண்டு முறை கூறி ஸித்தாந்தம் பண்ணுகிறது வேதம். ஆகையால் ஸ்வாத்யாயப்ரவசனங்களே வேதமார்க்கம், "தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது" என்றபடி ஸ்வாத்யாயப்ரவசனங்களே பொழுதுபோக்காகப் பெற்ற நம் ஸ்வாமி போல்வார்களுக்கே ஸ்ரீமத் வேதமார்க்கப்ரதிஷ்டாபனாசார்யர் என்ற விருது பொருந்தும்.

"ஓதுவாய்மையுமுவனியப் பிறப்பும் உனக்குமுன்தந்த வந்தணனொருவன்"

என்ற (ஸாந்தீபிநியைப்பற்றிய) பெரிய திருமொழிப் பாசுரத்துக்கு வ்யாக்யானம் செய்யா நின்ற பெரியவாச்சான்பிள்ளை "ஒருவன்—அத்விதீயன்; வித்யா ஸ்தானங்களுக்கடையத் தானேயாம்படி சமைந்தவன். முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸபுராணங்களையுமதிகரித்து பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளுமதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலே யாம் நம்பிள்ளையைப் போலே அதிகரிப்பிக்க வல்லவனையிறே 'ஒருத்தன்' என்பது" என்றருளிச் செய்தபடி "இவருமொருவரே" என்று நாமெல்லோரும் அதிசயித்துக் கொண்டாடும் படியான ப்ரபாவங்களையுடையவர் நம் ஸ்வாமி.

நம் ஸ்வாமியை ஸேவிக்கும் போதெல்லாம் ஆளவந்தார் தமக்குப்பின் தர்சனப்ரவர்த்தகராவாரார் என்று நெடுநாள் விசாரித்துத்தேடி எம்பெருமானாரைக்கண்டு ஆமுதல்வனிவன் என்று தம்மடியார்களுக்கு அறிமுகப்படுத்தின ஐதிஹ்யம் அடியேனுக்கு ஞாபகம் வருகிறது. இவருடைய சதுச்சாஸ்த்ர பாண்டித்யத்தைப் பற்றியோ அரிய உபந்யாஸங்களைப் பற்றியோ, அவ்வுபந்யாஸங்களுக்குத் திரண்டுவரும் ரஸிகர்களின் ஓலக்கங்களைப்பற்றியோ, இவர் எழுதிய பல நூற்றுக்கணக்கான நூல்களைப்பற்றியோ எடுத்துக்கூறுவது அடியேனுடைய சிறு பேச்சுக்கு நிலமல்ல. நான் எத்தனையோ உபந்யாஸங்கள் நம் தேசத்திலும் மற்ற தேசங்களிலும் மேடைகளில் கேட்டிருக்கிறேன், நம் ஸ்வாமியின் நாவீறு தனிப்பட்டது. பட்டரைப்பற்றிச் சிறியாண்டான் பெருமாள் பணித்தாராக ஓர் ஐதிஹ்யமுண்டு. அதாவது "நான் சொல்லுகிற வாச்யவாசகங்களே யன்றோ பட்டரும் வ்யவஹரிக்கிறது என்றிருக்க வொண்ணாது; அங்குத்தைக்கு ஏற்றமுண்டு. முன்னே நின்ற தூணை நான் தூண் என்றவாறே சிராயாய்த் தோற்றும்; அவர் சொன்னவாறே தளிரும் முறியும் செருந்துமாய்த் தோற்றும்" என்று. அம்மாதிரியாகவேதான் நம் ஸ்வாமியின் நாவீறும். மற்றவர்களுடைய வாக்குக்கும் இவருடைய வாக்குக்கும் நெடு வாசியுண்டு.

http://acharya.org

எத்தனையோ அருளிச் செயல்களையும், பூர்வாசாரிய க்ரந்தங்களையும் பற்றி நம் ஸ்வாமி உபந்யாஸம் செய்திருக்கிறார்கள், காலக்ஷேபம் ஸாதித்திருக்கிறார்கள், அச்சிட்டிருக்கிறார்கள். இவைகளில் இவர் விசேஷித்து அபிமானித்தது எது என்று என்னைக் கேட்டால், சற்றும் யோஜிக்கவேண்டாமல் ஆசார்ய ஹ்ருதயம் என்று துணிந்து சொல்லுவேன். ஆளவந்தாருக்கு "அறுக்கும் வினையும்" எம்பெருமானாருக்குத் திருப்பாவையும், நஞ்சீயருக்கு "தூவிரிய மலருழக்கியும்" பட்டருக்குத் திரு நெடுந்தாண்டகமும் அபிமதமானாற்போலே நம் ஸ்வாமிக்கு ஆசார்ய ஹ்ருதயம். இந்த க்ரந்தத்தில் இவருக்கு விசேஷ ப்ரதிபத்தி. எம்பெருமானாரைப் போலே இன்னுமொரு அறுபதாண்டு எழுந்தருளியிருந்து நமக்கெல்லோருக்கும் உபகரிக்கவேணுமாய் பல்லாண்டு கூறி, இம்மங்களமான படத்தைத் திறந்து வைக்கிறேன்." (பலத்த கரகோஷம்)

இவ்வாறு ஸ்ரீ ஸ்வாமியைப் பற்றி டாக்டர் கிருஷ்ணன் தமிழில் பேசி முடித்தபின், அவ்வமயம் கூட்டத்தில் பிரஸன்னமாயிருந்த வட இந்திய ஆஸ்திகர்களுக்காக, ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி ராகவன், ஸ்ரீ கிருஷ்ணனின் சொற்பொழிவின் ஸாராம்சத்தை ஹிந்தியில் மொழி பெயர்த்து எடுத்துரைத்தார்.

அடுத்த நிகழ்ச்சி 'பிரபந்த ஆர்கேஸ்ட்ரா' என்ற கூட்டு வாத்திய இசை. ஆர்கெஸ்ட்ரா கோஷ்டியார் தேவகானத்திற் கொப்ப தங்கள் இன்னிசையைப் பாடி, யாவரையும் ஆழ்வார் பாசுரங்களில் ஈடுபடச் செய்தனர். இந்த ஆர்கெஸ்ட்ராவில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் ஸ்ரீமதிகள் சரோஜா விஜயராகவன், ஆனந்தா ராஜகோபாலன், நாமகிரி ராஜகோபாலன், சுகுந்தாராமன், சுந்தரி வெங்கடராமன், ராமலக்ஷ்மி ராமசந்திரன், குமாரிகள் விமலா ராகவன், வஸந்தா சோமசுந்தரம், குமுதினி கிருஷ்ணன், மிருதங்கம் மாஸ்டர் சந்தானம் ஆகியவர்கள். ஆர்கெஸ்ட்ராவைத் தயாரித்தவர் ஸ்ரீ பார்த்தசாரதி ஐயங்கார்.

செவிக்கு அளிக்கப்பட்ட இவ்விருந்துக்குப் பிறகு ஆஸ்திகர்களின் ஹ்ருதயத்திற்கு விருந்தாக அமைந்தது நம் ஸ்வாமிகளின் தேனும் பாலும் அமுதுமான உபந்யாஸம். இன்றைய விழாவின் பெயரை ஒட்டியே ஸ்வாமிகள் "ஆழ்வார்களும் அவர்களின் ஆதேசமும்" என்பதைப்பற்றி அழகான சொற்பொழிவு நிகழ்த்தினர். இரவு 9-15 க்கு கூட்டம் கலைந்தது.

---


புது டெல்லி, ஆகஸ்டு 5

# 3. ஆண்டாள் தினம்

இன்று ஆண்டாள் அவதரித்த திருவாடிப்பூரம். இதை யொட்டியே இன்றைய விழாவை "ஆண்டாள் தினம்" என்று பெயரிட்டது. ஸ்வாமி அண்ணங்கராசாரியார் இன்று மூன்று கூட்டங்களில் ஹிந்தியிலும், தமிழிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். ஷஷ்டி யப்த பூர்த்தி உத்ஸவத்தில் தவிர, ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் திருவாடிப் பூர உத்ஸவத்திலும் கலந்து கொண்டு கோதையின் பல வகைப்பட்ட பெருமைகளைப் பரக்க எடுத்துரைத்த பக்த கோடிகளை ஆனந்த பரவசராக்கினர். ஒரு கூட்டத்தில் இன்று பேசும்போது "கண்ணனது அடிச்சுவடுகளைக் கொண்ட பெருமை வாய்ந்த இந்த க்ஷேத்திரம்—இந்திரப்ரஸ்தத்தில் கொண்டாடப்படும் நம் ஆண்டாளின் திருவாடிப்பூரமஹோத்ஸவானுபவத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிட்டிற்றே!" என்று நம் ஸ்வாமி ஆனந்தபாஷ்பம்

http://acharya.org

காஞ்சீபுரம் P. B. A. ஸ்வாமிக்கு புது டெல்லியில் 3—8—51 தேதியிலிருந்து 8—8—51 தேதி வரை நடந்த
ஷஷ்டியப்தபூர்த்தி விழாக்கொண்டாட்டத்தின் முடிவுநாளில்
கனம் முன்ஷி அவர்களால் ஸ்வாமிக்குப் பரிசளிக்கும் காட்சி.



http://acharya.org